ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

மார்கழி
டிசம்பர் — 1979



விலை

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,

I. ஸ்ரீ ராமகிருஷ்ணர்

நூல்	ரூ. பை
ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருடைய சீடர்களும்	12 50
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம்	3 00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் கதாமிருதம் (முதல் பாகம்)	8 00
(இரண்டாம் பாகம்)	8 00
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள்	8 00
ஸ்ரீ ராமகிருஷ்ண உபநிஷதம்	1 50
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்	3 50
குருதேவர் வாக்கியம்	1 25
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் கதை	0 35

II. ஸ்ரீ சாரதாதேவியார்

நூல்	ரூ. பை
ஸ்ரீ சாரதாதேவியார் அவரது வரலாறும் திருவாக்கும்	*(அச்சில்)*
ஸ்ரீ சாரதாதேவியாரது சரிதம்	1 50

III. சுவாமி விவேகானந்தர்

நூல்	ரூ. பை
சுவாமி விவேகானந்தர் (ரா. கணபதி) சாதா பைண்டு	12 00
காலிகோ பைண்டு	16 00
ஸ்ரீ விவேகானந்தர் சரிதம்	4 00
சிறுவர்களது விவேகானந்தர்	2 00
விவேகானந்தர் (மூவர்ணப் படங்களுடன்)	2 50
சுவாமி விவேகானந்தரின் சம்பாஷணைகள்	6 00
,, ,, காலிகோ	7 00
இந்தியப் பிரசங்கங்கள் (காலிகோ)	6 00
கருமயோகம்	2 00
பக்தியோகம்	1 50
இராஜயோக உரைகள்	2 50
நமது தாய் நாடு	2 00
கல்வி	2 50
பாரதப் பெண்மணிகள்	2 50
தற்கால இந்தியா	1 00
சிகாகோ பிரசங்கம்	1 00
எனது வாழ்வும் பணியும்	0 85
எனது போர்முறை	0 75
எனது குருநாதர்	1 25
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0 60
விவேகானந்தர் பாதையிலே...	0 50

IV. இதர நூல்கள்

நூல்	ரூ. பை
ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகளின் வரலாறும் ஞானோபதேசமும்	3 00
சுவாமி இராமகிருஷ்ணானந்தர்	3 50
மகான் துர்க்காசரண நாகர்	1 50
திரு அருள் மொழி	6 00
திருக்கயிலாயகிரி யாத்திரை	3 00
இந்துமத ஸாரம்	3 00
பக்தி ஸாரம்	2 25
பக்தி மார்க்கம்	1 00
நாரதர் கலகம்	4 75
கடோபநிஷதம் (நாடகம்)	2 00
ப்ரச்னோபநிஷதம் (நாடகம்)	2 00
வேதாந்த ஸாரம் (காலிகோ)	2 00
பஜனாவளி	5 00
ஆத்ம நிவேதனம்	2 00

V. முரசு நூல்கள் (பாக்கட் சைஸ்)

நூல்	ரூ. பை
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஞான முரசு	0 80
ஸ்ரீ சாரதாதேவியாரின் அன்புமுரசு	0 80
ஸ்ரீ விவேகானந்தரின் வீர முரசு	0 80
ஸ்ரீ கிருஷ்ணரின் யோக முரசு	0 80
ஸ்ரீ சங்கரின் வேதாந்த முரசு	0 80
புத்தரின் அற முரசு	0 80
இயேசு கிறிஸ்துவின் அருள் முரசு	0 80

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் சந்தாதாரர்களுக்கு, சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் எல்லா வெளியீடுகளின் மீது 5% கழிவு தரப்படும். நூல்களை அனுப்புமாறு எழுதும் கடிதங்களில் சந்தாதாரர்கள் தங்களின் சந்தா 'எண்ணையும், கழிவு நீக்கி நூல்களை விற்பனைக்குப் பெற விரும்புவதையும் குறிப்பிடக் கோருகிறோம்.

சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் : சுடர்கள் **1 - 10**

சுவாமி விவேகானந்தர் பேசியவை, எழுதியவை—அனைத்தும் 10 தொகுதிகளாக வெளிப்பட்டன. அவற்றுள் 4, 6, 7, 9, ஆகிய நான்கு தொகுதிகளும் கைவசம் இல்லை. ஏனைய ஆறு தொகுதிகளும் விற்பனைக்குக் கிடைக்கும்.

சாதா பைண்டு விலை ரூ. **5-00** *காலிகோ பைண்டு ரூ.* **6-50**

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை - **600 004**

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—59	டிசம்பர் 1979	இதழ்—12

பொருளடக்கம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004
1979 டிசம்பர் மாத நிகழ்ச்சிகள்

தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியார் ஜயந்தி விழா

10-12-79 திங்கள்	ஜன்மதிதி : விசேஷ பூஜை, பஜனை, ஹோமம் முதலியன (காலை 5 மணிமுதல் 11மணிவரை)
மாலை 7 மணிக்கு	சொற்பொழிவு (மாலை வழிபாட்டிற்குப் பிறகு)
16-12-79 ஞாயிறு	பொதுவிழா நிகழ்ச்சிகள்
மாலை 5 மணிமுதல் 5-30 வரை	பக்திப் பாடல்கள்
மாலை 5-30 முதல் 7 மணிவரை	சொற்பொழிவுகள்
	தலைவர் : சுவாமி தபஸ்யானந்தர்
	பேசுபவர் : திருமதி பார்வதி ஸ்ரீநிவாசன் (தமிழ்)
29-12-79 சனி	ஸ்ரீமத் பகவத் கீதா ஜயந்தி கீதா பாராயணம் காலை 8-30 மணிக்கு
2-12-79 ஞாயிறு	ஸ்ரீராமகிருஷ்ண நாம சங்கீர்த்தனம் (மாலை 7 மணிக்கு)
15-12-79 சனி	ஸ்ரீமத் சுவாமி சிவானந்தர் ஜயந்தி ஸ்ரீ ராமநாம சங்கீர்த்தனம் — (மாலை வழிபாட்டிற்கு முன்பு)
23-12-79 ஞாயிறு	ஸ்ரீ சாரதா நாம சங்கீர்த்தனம் (மாலை 7 மணிக்கு)
24-12-79 சனி	ஸ்ரீமத் சுவாமி சாரதானந்தர் ஜயந்தி
29-12-79 சனி	ஏகாதசி ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம் (மாலை வழிபாட்டிற்கு பிறகு)
30-12-79 ஞாயிறு	அந்தர் யோகம் (சாதனை தினம்)
30-12-79 ஞாயிறு	சிவ நாம சங்கீர்த்தனம் (மாலை 7 மணிக்கு)
சிறப்பு சொற்பொழிவுகள் :	சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு
1-12-79	1. அத்யாத்தும ராமாயணம்—பி. ராமகிருஷ்ணன்
விசேஷ தினங்கள் :	
24-12-79 திங்கள்	கிறிஸ்மஸ்: பைபிள் படித்தலும் சொற்பொழிவும்
7 மணிக்கு	(மாலை வழிபாட்டிற்குப் பிறகு)

மடத்தில் ஞாயிறுதோறும் நடைபெறும் சத்சங்க நிகழ்ச்சிகள், வார நாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள், வேறு சில நிகழ்ச்சிகள் ஆகியவை வழக்கம் போல் நடைபெறும்.

6.12.79

Acc-No-38700

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 59 | சித்தார்த்தி ௵ மார்கழி ௴ | இதழ் 12

பிரார்த்தனை

आशां विहाय परिहृत्य परस्य निन्दां पापे रतिं च सुनिवार्य मनः समाधौ।
आदाय हृत्कमल मध्यगतं परेशं वाराणसीपुरपतिं भज विश्वनाथम्॥

ஆசாம் விஹாய பரிஹ்ருத்ய பரஸ்ய நிந்தாம்
பாபே ரதிஞ்ச ஸுநிவார்ய மன: ஸமாதௌ |
ஆதாய ஹ்ருத்கமலமத்யகதம் பரேசம்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ||

—விச்வநாதாஷ்டகம் (சங்கரர்)

ஆசையை விட்டு, பிறரை நிந்திப்பதை விட்டு, பாவத்தில் பற்றை அறவே ஒழித்து, மனதை ஒருமுகப்படுத்தி, இதயகமலத்தின் நடுவில் உறையும் காசிமாநகரின் பதியும் உலகநாயகனுமாகிய காசி விச்வநாதனை (பரமேசுவரனை)ப் பஜிப்பாயாக.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்; எம்பெருமான்!
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்.

—திருவாசகம்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

திங்கட்கிழமை, அக்டோபர் 20, 1884

இன்றைய தினம் படாபசாரைச் சேர்ந்த மல்லிக் தெருவிலுள்ள 12-ஆம் நம்பர் வீட்டுக்கு, குருதேவர் வருகை தருவதாக இருந்தார். அந்த வீட்டில் அன்னகூடம் என்ற விழாவைக் கொண்டாட மார் வாரிபக்தர்கள்ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர்கள் அந்த விழாவில் குருதேவரைக் கலந்து கொள்ள அழைத்திருந்தார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு காளிபூஜை நடந் தேறியது. அப்போது குருதேவர் தட்சிணேசுவரத் தில் பக்தர்களுடன் மகிழ்ச்சியாக இருந்தார். மறு நாள் பக்தர்கள் சூழ, சிந்தி பிரம்ம சமாஜத்தின் திருவிழாவிற்குச் சென்றிருந்தார்.

தீபாவளிப் பண்டிகையின் மூன்றாவது நாளாகிய இன்றும்கூட, அந்தப் பண்டிகையையொட்டிய மகிழ்ச்சி தொடர்ந்துகொண்டிருந்தது.

மாலை சுமார் மூன்று மணிக்கு ம-, சிறிய கோபா லுடன் படாபசாருக்கு வந்தார். குருதேவர் இரண்டு சாதாரணத் துணிகளை வாங்கி வரும்படி ம-விடம் கூறியிருந்தார். அதன்படி ம- அந்தத் துணிகளை வாங்கி அவற்றை ஒரு காகிதத்தில் பொட்டலமாகச் சுற்றிக் கையுடன் கொண்டு வந்திருந்தார்.

ம-வும் சிறிய கோபாலும் மல்லிக் தெருவை அடைந்தனர். அங்கு அப்போது மக்கள் திரள் திரளாகக் குழுமியிருந்ததையும் மாட்டுவண்டி, குதிரைவண்டி முதலியன வழியை அடைத்துக் கொண்டிருந்ததையும் அவர்கள் இருவரும் கண்ட னர்.

ம-வும் சிறிய கோபாலும் 12-ஆம் நம்பர் வீட்டை நெருங்கியபோது, குருதேவர் அங்கு ஒரு வண்டியில் அமர்ந்திருந்ததையும், அந்த வண்டி தெருவிலிருந்த நெரிசல் காரணமாக முன்னுக்கோ பின்னுக்கோ செல்ல முடியாத நிலையில் இருந்ததையும் பார்த்த னர். வண்டிக்குள் குருதேவருடன் பாபுராமும் ராம் சக்கரவர்த்தியும் இருந்தனர். ம-வையும் சிறிய கோபாலையும் பார்த்ததும் குருதேவர் புன்முறுவல் பூத்தார்.

குருதேவர் வண்டியிலிருந்து இறங்கினார். ம- வழியைக் காட்டிக்கொண்டு முன்னால் செல்ல, அவ ரைத் தொடர்ந்து குருதேவர் பாபுராமுடன் வீட்டுக் குள் சென்றார். வீட்டின் கீழ்த் தாழ்வாரத்தில், கப்பலில் ஏற்றுமதி செய்வதற்காகப் பெரிய பெரிய துணிக்கட்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றை மாட்டுவண்டிகளில் ஏற்றிக்கொண்டிருந் தார்கள்.

குருதேவர் பக்தர்களுடன் மேல்மாடிக்குச் சென் றார். மார்வாரி பக்தர்கள் குருதேவரை வரவேற்று அவரை மூன்றாவது மாடியிலுள்ள அறையில் அமரச் செய்தனர். அந்த அறையின் சுவரில் காளிதேவி யின் வண்ண ஓவியம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் குருதேவர் வணங்கினார்.

குருதேவர் தம்முடன் அமர்ந்திருந்த பக்தர்களு டன் உரையாட ஆரம்பித்தார். அப்போது அங்கு ஒரு மார்வாரி பக்தர் வந்து ஸ்ரீகுருதேவரின் திருவடி களை இதமாகப் பிடித்துவிடத் தொடங்கினார். குரு தேவர், "வேண்டாம், வேண்டாம்" என்று சொல்லி அந்த மார்வாரி பக்தரின் செயலைத் தடுத்தார். பிறகு அவர் ஏதோ நினைத்துக்கொண்டவராக, "சரி, சிறிது நேரம் செய்" என்றார். அப்போது அவரு டைய ஒவ்வொரு சொல்லிலும் கருணை ததும்பி யிருந்தது.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ம-விடம்) : பள்ளிக்கூடம் என்ன ஆயிற்று?

ம- : ஐயனே, இன்று பள்ளி விடுமுறை.

ஸ்ரீராமகிருஷ்ணர் (புன்சிரிப்புடன்) : நாளைய தினம் சண்டியைச் (தேவீமாகாத்மியம்) சங்கீத மாகப் பாடும் நிகழ்ச்சி ஆதரின் வீட்டில் நடைபெற இருக்கிறது.

வீட்டுத் தலைவராகிய மார்வாரி பக்தர் ஒரு பண்டிதரை ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அழைத்து வந்தார். அந்தப் பண்டிதர் குருதேவரை வணங்கிவிட்டு அவரருகில் அமர்ந்தார். இருவரும் ஆன்மிகம் சம்பந்தமாக உரையாட ஆரம்பித்தனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : கடவுள் பக்தர்களுக்காக அவதாரம் செய்கிறார்; ஞானிகளுக்காக அல்ல.

பண்டிதர் : "சாதுக்களைக் காப்பதற்கும் துஷ்டர்களை அழிப்பதற்கும் தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் யுகந்தோறும் வந்து உதிப்பேன்."* முதலாவதாக, அவதாரம் பக்தர்களை மகிழ்விப்பதற்காக நிகழ்கிறது; இரண்டாவது காரணம், தீயவர்களை அழிப்பது என்பதும் நடைபெறுகிறது. ஞானியோ ஆசைகளே இல்லாதவன்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (புன்சிரிப்புடன்) : ஆனால் என்னிடமிருந்து எல்லா ஆசைகளும் அடியோடு நீங்கவில்லை. கடவுள்பக்தி என்ற ஆசை என்னிடம் இருக்கிறது.

அப்போது பண்டிதரின் மகன் அந்த அறையில் நுழைந்தான். அவன் குருதேவரை வணங்கிவிட்டு அருகில் அமர்ந்துகொண்டான்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (பண்டிதரிடம்) : சரி, பாவம் என்று எதைச் சொல்லுகிறார்கள்? பக்தி என்று எதைச் சொல்லுகிறார்கள் ?

பண்டிதர் : பகவானைத் தியானிப்பதன் மூலம் மனம் பக்குவமடைந்து மென்மை ஆகிறது. இதற்குப் பெயர் பாவம். அந்த நிலை, சூரியன் உதித்தால் பனிக்கட்டி உருகிவிடுவதைப் போன்றது.

ஸ்ரீராமகிருஷ்ணர் : அது சரி, பிரேமை என்றால் என்ன ?

பண்டிதர் இந்தியில் பேசிக்கொண்டிருந்தார். குருதேவரும் அவருடன் இந்திமொழியில் இனிமையாக உரையாடிக்கொண்டிருந்தார். குருதேவரின் கேள்விக்குப் பண்டிதர் ஏதோ ஒரு விதமாகப் பிரேமை என்பதைப்பற்றி விளக்கம் கூறினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : (பண்டிதரிடம்) : இல்லை! இல்லை! பிரேமை என்பதற்கு அது அர்த்தம் அல்ல. பிரேமை என்றால் இறைவனிடம் கொள்ளும் அளவிடற்கரிய அப்படிப்பட்ட ஓர் ஆழ்ந்த பற்று—அது காரணமாக உலகத்தை அடியோடு மறந்துவிடுவது மட்டுமல்ல, தனக்கு மிகவும் விருப்பமானதாக இருக்கும் தன் உடலையுங்கூட ஒருவன் மறந்துவிடுகிறான். இந்த நிலை ஸ்ரீசைதன்யதேவருக்கு ஏற்பட்டிருந்தது.

பண்டிதர் : ஆம் ஐயனே, அந்த நிலை ஒரு குடிகாரனின் நிலையைப் போன்றது.

ஸ்ரீராமகிருஷ்ணர் : நல்லது. ஒருசிலருக்குப் பக்தி ஏற்படுகிறது. மற்றும் வேறு சிலருக்குப் பக்தியே ஏற்படுவதில்லை. இதை நீங்கள் எப்படி விளக்குகிறீர்கள்?

பண்டிதர் : பகவானிடம் பாரபட்சம் கிடையாது. அவன் ஒரு கற்பக மரம். ஒருவன் எதையெல்லாம் விரும்பிப் பகவானிடம் கேட்கிறானோ அதையெல்லாம் பெறுகிறான். ஆனால் ஒருவன் கற்பக மரத்தின் அருகில் சென்று கேட்க வேண்டும்.

பண்டிதர் இவற்றை இந்தியில் சொல்லிக்கொண்டிருந்தார். குருதேவர் ம- இருந்த பக்கம் திரும்பிப் பண்டிதர் சொன்ன கருத்துக்களை ம-வுக்கு வங்கமொழியில் எடுத்துக் கூறினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : ஐயா, சமாதி என்பதைப் பற்றி எங்களுக்கு விளக்கிச் சொல்லுங்கள்.

பண்டிதர் : சமாதியில் இரண்டு வகை இருக்கிறது. ஒன்று சவிகல்ப சமாதி, மற்றொன்று நிர்விகல்ப சமாதி. நிர்விகல்ப சமாதியில் மனம் வேலை செய்வது அடியோடு நின்றுபோய்விடுகிறது. அதில் எந்தவித வேற்றுமையும் இருப்பதில்லை.

ஸ்ரீராமகிருஷ்ணர் : ஆம், அப்போது மனம் முழு அளவில் பரம்பொருள் மயமாகிவிடுகிறது. தியானிப்பவன், தியானிக்கப்படும் பொருள் என்ற வேற்றுமை இருப்பதில்லை. மேலும், க்ஷேத்திர சமாதி (சேதன சமாதி), ஜட சமாதி என்றும் இரண்டு விதச் சமாதிநிலைகள் இருக்கின்றன. நாரதர், சுகதேவர் ஆகியோர் க்ஷேத்திர சமாதியை அடைந்திருந்தார்கள். அது அப்படித்தானே?

பண்டிதர் : ஆம், ஐயனே.

ஸ்ரீராமகிருஷ்ணர் : இன்னும் உன்மனா சமாதி, ஸ்தித சமாதி என்றும் இரண்டுவிதச் சமாதிகள் இருக்கின்றன; அல்லவா?

---

*பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் |
தர்ம-ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே ||
—கீதை, 4-8

பண்டிதர் பேசாமல் மௌனமாக இருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: அது இருக்கட்டும். ஜபம், தவம் ஆகியவற்றைப் பழகுவதால், கங்கைத் தண்ணீரின் மீது நடப்பது போன்ற சித்திகள் ஒருவனுக்கு ஏற்படக்கூடும் அல்லவா?

பண்டிதர்: ஆம், அவ்விதம் ஏற்படுகிறது. ஆனால் பக்தன் அவற்றை விரும்புவதில்லை.

மேலும் சிறிதுநேரம் உரையாடல் தொடர்ந்தது. பிறகு பண்டிதர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம், "ஏகாதசியன்று உங்களைப் பார்க்க தட்சிணேசுவரம் வருகிறேன்" என்றார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: வாருங்களேன். உங்கள் மகன் நல்லவன்.

பண்டிதர்: ஐயனே! என்னவென்று சொல்வது? எல்லாமே உண்மையற்றவை. ஆற்றில் ஓர் அலை ஓய்ந்தால் மற்றோர் அலை வருகிறது. அது போன்று எல்லாமே நிலையற்றவை.

ஸ்ரீராமகிருஷ்ணர்: உங்களிடம் சாரம் (விவேகம், வைராக்கியம்) இருக்கிறது.

பண்டிதர் சிறிது நேரத்திற்குப் பிறகு குருதேவரை வணங்கிவிட்டு, "இப்போது பூஜை செய்யப் போகட்டுமா?" என்று குருதேவரிடம் கேட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: எங்கே போகிறீர்கள்? உட்காருங்கள், உட்காருங்கள்.

பண்டிதர் மீண்டும் பழையபடியே உட்கார்ந்துகொண்டார். குருதேவர் பண்டிதருடன் ஹடயோகம் பற்றிப் பேசத் துவங்கினார். பண்டிதர் இந்தியில் ஹடயோகம் பற்றிக் கூறினார். அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர், "ஆம், அதுவும் ஒரு வகையான தவம்தான். ஆனால் ஹடயோகியின் கவனமெல்லாம் உடலின்மீது இருக்கிறது. இவன் உடலை விரும்பும் துறவி" என்றார். பண்டிதர் குருதேவரிடம் விடைபெற்றுக்கொண்டு பூஜை செய்யச் சென்றார். ஸ்ரீராமகிருஷ்ணர் பண்டிதரின் மகனுடன் பேச ஆரம்பித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: நியாயம், வேதாந்தம், மற்றுமுள்ள தத்துவ தரிசனங்கள் ஆகியவற்றைச் சிறிது படித்திருந்தால் ஸ்ரீமத்பாகவதத்தை மேலும் நன்றாகப் புரிந்துகொள்ளலாம். அப்படித்தானே?

பண்டிதரின் மகன்: ஆம், ஐயனே. சாங்கிய தத்துவம் படிப்பது மிகவும் அவசியம்.

இவ்விதம் உரையாடல் தொடர்ந்துகொண்டிருந்தது. குருதேவர் பெரிய தலையணையின்மீது சிறிது சாய்ந்தபடி படுத்துக்கொண்டார். பண்டிதரின் மகனும் மேலும் சில பக்தர்களும் தரையில் அமர்ந்திருந்தார்கள். குருதேவர் சாய்ந்து படுத்திருந்த நிலையில் ஒரு பாட்டுப் பாடினார்:

"நண்பனே, மனதை ஹரியின் மேல்
வைத்திடுக!
என்றாவது ஒரு நாள் அவனை நீ
அடைந்திடுவாய்!"

அப்போது வீட்டின் தலைவராகிய மார்வாரி பக்தர் அங்கு வந்து குருதேவரை வணங்கினார். அவர் குருதேவரிடம் எல்லையற்ற பக்தி பூண்டவர். அங்கு அமர்ந்திருந்த பண்டிதரின் புதல்வனிடம், "இங்கு இருப்பவர்கள் பாணினி இலக்கணம் படிக்கிறார்களா?" என்று குருதேவர் வினவினார்.

பண்டிதரின் மகன்: ஆம், படிக்கிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: சரி, நியாயம், வேதாந்தம் ஆகியவற்றைப் படிக்கிறார்களா?

குடும்பத்தின் தலைவருக்கு இந்த உரையாடலில் ஈடுபாடில்லை. அவர் குருதேவரிடம் வேறு சிலவற்றைப்பற்றிக் கேட்டார்.

குடும்பத் தலைவர்: ஐயனே, எங்களுக்கு வழி என்ன?

ஸ்ரீராமகிருஷ்ணர்: பகவானின் பெயரையும் புகழையும் பாடுவது, சாதுக்களின் தொடர்பு, பகவானிடம் மனம் உருகிப் பிரார்த்திப்பது ஆகியவை ஆகும்.

குடும்பத் தலைவர்: ஐயா, லௌகிக விஷயங்களில் எனது மனம் ஈடுபடுவது குறைந்துவிடும்படி எனக்கு அருள்புரியுங்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: (புன்சிரிப்புடன்) இப்போது லௌகிகத்தில் எவ்வளவு மனம் வைத்திருக்கிறாய்? எட்டணா (ஐம்பது சதவிகிதம்) இருக்குமா?

ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்

குடும்பத் தலைவர்: ஆம் ஐயனே, தாங்கள் அதை அறிவீர்கள். தங்களைப் போன்ற பெரியோர்களின் திருவருள் கிட்டாத நிலையில் நாங்கள் வாழ்க்கையில் எதையுமே பெற இயலாது.

[தொடரும்]

விஜயதீபம்

சுவாமிஜியின் இராஜயோகம்

சுவாமி விவேகானந்தர் அமரத்துவம் வாய்ந்த அரிய பல சொற்பொழிவுகளை உலக மக்களுக்கு வழங்கிச் சென்றிருக்கிறார். அவற்றுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று சொல்லத் தக்க வகையில் அவருடைய இராஜயோகச் சொற்பொழிவுகள் அமைந்திருக்கின்றன.

சுவாமிஜி வேதாந்தப் பிரசாரப் பணிக்காக அமெரிக்க நாட்டில் தங்கியிருந்தார். அப்போது, இந்தியாவிற்கே சிறப்பாக உரிய ஆன்மிக ஞானத்தை மேலைநாட்டு மக்களுக்கு, ஏன், உலக மக்கள் அனைவருக்குமே அவர் வாரி வாரி வழங்கினார்.

இந்திய யோகிகள் பண்டைக் காலத்திலேயே பலவித ஆத்மசாதனைத் தத்துவங்களைப் பயின்று பிரசாரம் செய்திருக்கிறார்கள். அந்தத் தத்துவங்களைத் தற்கால மக்கள் எளிதில் புரிந்துகொண்டு பயன் பெறத் தக்க வகையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் விஞ்ஞானரீதியாகவும் சுவாமிஜி தமது எழுத்துக்களின் மூலமும் சொற்பொழிவுகளின் மூலமும் விளக்கியருளினார்.

சுவாமிஜி இராஜயோகம் கூறும் உண்மைகளை விவரித்ததுடன், பதஞ்ஜலி யோகசூத்திரங்களையும் மொழிபெயர்த்து விளக்கவுரையும் எழுதியிருக்கிறார்.

விவேகானந்த ஆன்மிக இலக்கியப் பொக்கிஷத்தில் மிகவும் மதிப்பு வாய்ந்த மாமணிகளில் ஒன்றாக அவருடைய இராஜயோகம் என்ற நூல் திகழ்கிறது.

சுவாமி விவேகானந்தர் தலைசிறந்த நூலாசிரியராக விளங்கினார் என்பது உண்மைதான். ஆனால், அந்த ஒரு காரணம் மட்டுமே அவருடைய இராஜயோக நூலுக்குச் சிறப்பாக அமையவில்லை; அவரே ஓர் உத்தம யோகியாக விளங்கினார் என்பதுதான் இந்த நூலுக்கு உள்ள ஈடு இணையற்ற தனிப் பெரும் சிறப்பாகும்.

மகாயோகியாக விளங்கியவர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். அவரிடம் சாதனை பயின்று உயர்ந்த சமாதிநிலையை அனுபவித்த சித்தபுருஷரே சுவாமி விவேகானந்தர். ஆகவே யோகம் பற்றிய நூல் எழுதுவதற்கு முற்றிலும் அவர் தகுதியும் அத்தாட்சியும் பெற்றவர் ஆவார். யோகம் பற்றிய அவரது கருத்துக்கள் யாவும் வெற்று அறிவு ஆராய்ச்சியினால் விளைந்தவை அல்ல. மாறாக, அவரது சுய அனுபவத்தின் வெளிப்பாடாகவே அவை பிரகாசிக்கின்றன. கரையில் நின்றுகொண்டு யோகம் என்ற சமுத்திரத்தைப் பற்றிப் பேசியவர் அல்ல அவர்; அந்தக் கடலிலே அமிழ்ந்து, மூழ்கி, அதன் அடித்தலம் கண்டு, மேலெழுந்து வந்து, உண்மை இன்னதுதான் என்று சொன்ன உத்தமரே சுவாமி விவேகானந்தர்.

1895-ஆம் ஆண்டில் சுவாமிஜி நியூ யார்க் நகரத்தில் இராஜயோக வகுப்புக்கள் நடத்தினார். அப்போது இராஜயோகம் என்ற நூலையும் எழுதினார். இந்திய மாமுனிவர்கள் மலையிலும் காட்டிலும் அமைந்திருந்த தபோவனங்களிலே போதித்த பண்டைய ஞானம், இவ்விதம் மேலைநாட்டு நாகரிகத்தின் உறைவிடமாக விளங்கிய நியூ யார்க் நகரத்தின் சூழ்நிலையில் போதிக்கப்பட்டது.

சுவாமி விவேகானந்தரின் வாக்கிலிருந்து மந்திரங்களைப் போலவே வெளிவந்த இராஜயோகம் பற்றிய அருள்வாக்குகளை, அவர் சொல்லச் சொல்ல எழுதி வைக்கும் பாக்கியம், அந்தப் பெருமானுடைய மேலைநாட்டுச் சிஷ்யையும் பரமபக்தையுமான மிஸ் எஸ். இ. வால்டோ (சகோதரி ஹரிதாஸி) என்ற அம்மையாருக்குக் கிடைத்தது. அந்த அம்மையார்

தமக்குக் கிடைத்த இந்தப் பெரிய வாய்ப்பைக் குறித்துப் பின்வருமாறு மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டிருக்கிறார் :—

"இந்த நூலின் கருத்தை எனக்கு சுவாமிஜி சொல்லிச் சொல்லி எழுதச் செய்தார். அப்போது அவரைப் பார்ப்பதே தெய்வீக உணர்ச்சியைத் தட்டி எழுப்பக்கூடிய காட்சியாக இருந்தது. பதஞ்ஜலியின் யோகசூத்திரங்களுக்கு விளக்கம் சொல்லி வரும்போது சுவாமிஜி என்னை அப்படியே காத்திருக்கும்படி விட்டுவிட்டு ஆழ்ந்த தியான நிலைகளிலோ ஆத்மசிந்தனை நிலைகளிலோ அமிழ்ந்து மூழ்கிவிடுவார். பிறகு அந்த நிலைகளிலிருந்து ஒளி நிறைந்த விளக்கங்களுடன் திரும்புவார். நான் சதாசர்வகாலமும் பேனாவை மையில் முக்கியபடியே தயாராகக் காத்திருக்க வேண்டியிருந்தது. நீண்ட நேரம் அவர் அகமுகப்பட்ட நிலையில் இருந்து விட்டுத் திடீரென்று மௌனத்தைக் கலைத்துப் பேச ஆரம்பிப்பார். அப்போது, ஆவல் ததும்பும் ஏதோ ஒரு வாக்கோ அல்லது கருத்தூன்றிச் செய்யப்பட்ட நீண்ட ஒரு போதனையோ அவரிடமிருந்து வெளிப்படும்.''

ஆகவே, இராஜயோக நூல் விவேகானந்தரின் தியானகுண்டத்திலிருந்து அருள்ஜோதியாக எழுந்த ஒரு தெய்விக ஜ்வாலையாகும்.

> சுவாமி விவேகானந்தர் பதஞ்ஜலி யோக சூத்திரங்களுக்கு எழுதிய விரிவுரை அடுத்த இதழிலிருந்து விஜயத்தில் தொடராக வெளிவர இருக்கிறது. அதற்கு முன்னுரையாக இந்த இதழின் விஜயதீபம் இடம் பெறுகிறது.

மேலைநாட்டு அறிஞர்கள் பலர் சுவாமிஜியின் இராஜயோக நூலைப் பயின்று புத்தொளி பெற்றார்கள். அவர்களில் ஒருவராகிய பிரபல அமெரிக்க மேதை பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸ் என்பவர், 'வேதாந்த பரம்பரையின் தலைசிறந்த மணி' என்று சுவாமி விவேகானந்தரைப் பாராட்டியுள்ளார். ''பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் இராஜயோகம் பழகித் தமது நரம்புநோய்களைப் போக்கிக் கொள்ள முயன்று, அந்தப் பயிற்சியின் மூலம் உடல்நலம் மட்டுமின்றி அறிவுத் தெளிவும் ஆன்மிக உணர்வும் பெற்றார்'' என்று வில்லியம் ஜேம்ஸ் தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இவ்விதம் அவர் குறிப்பிட்டிருக்கும் அந்தப் பேராசிரியர் அவரேதாம் என்பதும், சுவாமிஜியின் அறிவுரையின்படி இராஜ யோகம் பழகிய அவர் தாம் பெற்ற நலன்களையே அவ்விதம் மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிறார் என்பதும் அறிஞர்பெருமக்களின் முடிவு ஆகும்.

ருஷ்யப் பேரறிஞர் லியோ டால்ஸ்டாயும் சுவாமிஜியின் இராஜயோக நூலின் பெருமையை உணர்ந்து கவரப்பட்டவர்களுள் ஒருவராவார்.

மனிதப்பிறவி பெற்றுள்ள நம்மில் பலருக்கு நம்மிடம் புதைந்திருக்கும் தெய்விகம் பற்றித் தெரியாமலே இருக்கிறது. இராஜயோகம் அதை நமக்குப் புரியும்படி செய்கிறது. பகவத்கீதையின் தத்துவம் முழுவதையும், 'தஸ்மாத் யோகீ பவார்ஜுன (ஆதலால், அர்ஜுனா, நீ யோகியாக இருப்பாயாக!)' என்று கீதாசாரியன் குறிப்பிட்டிருக்கிறார். சிரத்தையுள்ள சாதகர்கள் தெய்விக நிலையைப் பெறுவதற்குத் துணைபுரியும் வகையில் சுவாமி விவேகானந்தர் அரிய இராஜயோக நூலை அளித்துச் சென்றிருக்கிறார்.

மிகவும் நுட்பமான ஆன்மிக உண்மைகளை சுவாமிஜி தமது இராஜயோக நூலில் எளிய முறையில் விளக்கியுள்ளார். எனினும் அறிதற்கரிய யோகம்பற்றிய உண்மைகளைக் கூறும் அந்த நூலை அன்பர்கள் மீண்டும் மீண்டும் பல முறையும் கருத்தூன்றிப் படிப்பது அவசியமாகும். அத்துடன் தங்கள் ஆற்றலுக்கேற்ப யோகத்தின் ஒரு சிறிய பகுதியையாகிலும் நடைமுறை வாழ்க்கைக்குக் கொண்டுவர வேண்டியதும் அவசியமாகும். சுவாமிஜி இராஜயோகத்தை வெறும் வாய்வேதாந்தத்திற்குப் பயன்படும் பாடப்புத்தகமாக எழுதவில்லை. மாறாக, நடைமுறை அன்றாட வாழ்க்கையில் பழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டிய ஓர் அரிய பயிற்சிப் புத்தகமாகவே எழுதியிருக்கிறார். யோகாசாரியனாக விளங்கும் இறைவனின் திருவருளால் சுவாமிஜியின் இராஜயோக நூல் யோகப் பிரசாரப் பணிக்கு மேலும் மேலும் பயன்படுவதாக. ☆

தூய அன்னையாருடன் பழகிய நாட்கள்

சகோதரி ஸுநந்தா தேவி, பெங்களூர்

நாங்கள் பெங்களூர்வாசிகள். என் தந்தை டாக்டர் பி. வேங்கடாசலம் அவர்கள் ஸ்ரீராம கிருஷ்ண இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மைசூர் ராஜ்யத்தில் ராமகிருஷ்ண சங்கத்தைத் தொடங்குவதில் முன் நின்று, அதற்கு ஆதார ஸ்தம்பமாக விளங்கிய ஒருவர் அவர். அவருக்கு 1911-ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதியன்று சுவாமி இராமகிருஷ்ணானந்தஜி மகராஜிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. இவரே சென்னை ராமகிருஷ்ண மடத்தின் முதல் தலைவர் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். என் தந்தைக்கு அவர் எழுதியிருந்த கடிதத்தில், அன்னை ஸ்ரீ சாரதாதேவி என்கிற உருவில் வந்துள்ள லோகமாதா பெங்களூருக்கு எழுந்தருள இசைந்திருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் கூறியிருந்தார். அப்போது தூய அன்னை பத்துப் பேர்களுடன் தென்னகம் வந்திருந்தார். சென்னை வழியாக ராமேசுவர யாத்திரை மேற்கொண்டிருந்தார்.

1911-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அன்னையார் பெங்களூருக்கு வந்தார். பஸவங்குடியில் உள்ள ராமகிருஷ்ண ஆசிரம ஆலயத்தில் இருக்கை கொண்டிருந்தார். தூய அன்னை ஒரு வெள்ளிக்கிழமையன்று பெங்களூருக்கு வந்து, திங்களன்று விடைகொண்டார் என்பது நினைவிருக்கிறது. கூட்டம் கூட்டமாக மக்கள் அவரை நாடிச் சென்று ஆசி பெற்றனர்.

என் தாயாருக்கும் எங்களுக்கும் சௌகரியமாகத் தரிசனம் செய்து வைக்குமாறு ஆசிரமத்து சுவாமிஜிக்கு என் பிதா ஒரு கடிதம் கொடுத்து அனுப்பியிருந்தார். அவ்விதமே ஸ்ரீ சாரதாதேவியைத் தரிசித்தோம். அப்போது என் அன்னைக்கும் தூய அன்னைக்கும் இடையே நடந்த உரையாடல் இன்னமும் எனக்கு நன்கு நினைவிருக்கிறது. என் அன்னைக்கு வங்காளி மொழி தெரியாது; தூய அன்னைக்கோ தமிழ் தெரியாது. இருந்தபோதிலும் இருவரும் நீண்ட நேரம் உரையாடினர். அந்த உரையாடலின் இடையிடையே ஆனந்தச் சிரிப்பு அலைமோதியது. ஒருவர் நினைப்பதை மற்றவர் நன்கு புரிந்துகொள்கிறார் என்பதும், அவர்களுக்கிடையில் மொழி ஒரு பிரச்னையாகவே இல்லை என்பதும் கண்கூடாகத் தெரிந்தன. இம்மாதிரிப் பலமுறை உரையாடல்கள் நடந்ததுண்டு. அவற்றில் ஒன்றின்போதுதான் என் பெற்றோர்—தாயோடு தந்தையுமாகச் சேர்ந்து—என்னையும் என் சகோதரியையும் தூய அன்னையின் பணிக்கென்றே அவரிடம் அர்ப்பணிப்பதாகக் கூறினர். அந்தச் சமயத்தில் நாங்கள் மிகவும் சிறியவர்களாக இருந்ததால், சில ஆண்டுகள் சென்றபின் நாங்கள் அவரிடம் வந்து



பணி புரியலாம் என்று தூய அன்னை மறுமொழி கூறினார். அப்போது எனக்கு வயது பதின்மூன்றுதான்.

ஆறரை ஆண்டுகள் சென்றன. தூய அன்னையின் கைங்கரியத்தில் எங்களைத் தந்துகொள்வதற்காக நானும், என் இரண்டாவது சகோதரியும், என் அத்தை மகளும் காலம் சென்ற ஸ்ரீ எம். ராஜகோபால நாயுடுவுடன் 1917-ஆம் ஆண்டு அக்டோபர் பதின்மூன்றும் தேதியன்று கல்கத்தாவுக்குப் புறப்பட்டோம். கல்கத்தாவைச் சென்றடைந்த எங்களுக்கு ஓர் ஏமாற்றம் காத்துக் கிடந்தது. அம்மா ஒரு மாறுதல் வேண்டித் தம் பிறந்த ஊராகிய ஜயராம்பாடி கிராமத்துக்குப் போய் விட்டாராம்! எங்களுக்கு இது அதிர்ச்சியாகவே இருந்தது.

எட்டாத் தொலைவில் மொழி தெரியாத புதுச் சூழலில் நாங்கள் அடைந்த அனுபவம் விசித்திரமானது. கல்கத்தாவில் அம்மாவின் இருக்கையான உத்போதனுக்கு நாங்கள் நேரே ரெயில் ஸ்டேஷனிலிருந்து சென்றோம். அது ஒரு பிற்பகல் வேளை. அங்கு அன்னையின் பிரதானச் சீடராகிய சாரதானந்தஜி மகராஜைச் சந்தித்தோம். அதிலிருந்து நாங்கள் கல்கத்தாவில் தங்கியிருந்த காலம்

முழுவதும் அவரே எங்களுக்குப் பொறுப்பு எடுத்துக் கொண்டு துணையாக இருந்து வந்தார்.

எங்களுக்கு ஆங்கிலம் தவிர வேறு எந்த மொழியிலும் பேச முடியவில்லை. பேசக்கூட முடியாமல் எங்கோ வந்து தங்கியிருக்கிறோம் என்ற வெறிச்சான உணர்வும், வீட்டு நினைவுத் தாபமும் எங்களுக்கு ஏற்படாத வண்ணம் சகோதரி ஸுதீரா போஸ் மாலை எல்லாம் எங்களுடனேயே தங்கியிருந்து ஆங்கிலத்தில் உரையாடுவார். சகோதரி ஸுதீரா, நிவேதிதைப் பள்ளிக்கும் ஸ்ரீ சாரதா மாத்ரு மந்திரத்துக்கும் தலைவியாக இருந்தவர். அவரது பள்ளிக் குழந்தைகளுக்கு ஆங்கிலம் போதிக்கும் பொறுப்பை எங்களுக்கு அளித்தார். எங்களால் ஆங்கில மொழியை வங்கத்தில் மொழிபெயர்த்துப் போதிக்க முடியாதாகையால், 'நேரடி முறை'யில் பொருள்களைக் காட்டி, ஆங்கிலத்தில் விளக்கம் தந்தோம்.

இரண்டு மூன்று மாதங்களில் நாங்கள் வங்க மொழியறிவு பெற்றோம். அதன்பின் எங்களுக்கு மொழிப் பிரச்னை ஏதும் இருக்கவில்லை.

நாங்கள் வங்கமொழியறிவு பெற்ற பின்பே தூய அன்னையைச் சந்திக்க நேர்ந்ததும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் கட்டளை போலவே தோன்றுகிறது. அம்மா இந்தக் கால இடைவெளிக்குப் பின்தான் ஜயராம்பாடியிலிருந்து கல்கத்தாவுக்கு வந்தார். நாங்கள் வங்கமொழியில் பரிசயம் அடையுமுன்பே அம்மாவைச் சந்தித்திருப்பின் மொழிபெயர்ப்பாளர்களை நடுவில் வைத்துக்கொண்டே உரையாட வேண்டியிருந்திருக்கும். அப்போது அதில் மனம் விட்டுப் பழகும் இயல்பான அழகு இருந்திருக்காது.

அம்மா எங்களைக் கண்டவுடன் கூறிய முதல் வார்த்தைகள்: "குழந்தைகளா! உங்களுக்காக ஜயராம்பாடியில் காத்துக் காத்துப் பார்த்தேன். நீங்கள் அங்கு வராததால் நானே உங்களிடம் வந்துவிட்டேன்!"

தாய்மை சொட்டும் வார்த்தைகள்!

எங்களுக்கு மெய் சிலிர்த்தது எங்களிடம் சிறிது ஒட்டிக்கொண்டிருந்த 'அயல்' உணர்ச்சியும் அந்த வார்த்தைகளில் ஓடிப்போய்விட்டது.

நாங்கள் மாத்ரு மந்திர் என்ற விடுதியில் தங்கியிருந்தோம்; அன்னை 'உத்போதன்' கட்டிடத்தில் இருந்தார். இரண்டுக்குமிடையே நடந்து செல்கிற தொலைவுதான். அடிக்கடி நாங்களும் மற்றவர்களும் மாத்ரு மந்திரிலிருந்து அன்னையிடம் சென்று வருவோம். சில சமயங்களில் எங்களால் அவருக்கு இயன்ற சரீர கைங்கரியம் செய்வோம்.

அநுக்கிரகம் செறிந்த ஒரு பாக்கியத்தை நான் பெற்றதுண்டு. அதாவது, அன்னை காலை ஒன்பது மணிக்கு ஸ்நானம் செய்யுமுன் என்னை அழைத்துத் தமது திருமுடியிலும் திருமேனியிலும் தைலம் வைத்துத் தேய்க்குமாறு பணிப்பார். அப்போது அன்னையின் முடியிலிருந்து நிறைய நரைத்த கேசம் உதிரும். அவற்றை நான் வெளியில் போட்டதே கிடையாது. அவற்றைச் சேகரித்துச் சின்னச் சின்னதாகச் சுருட்டி என் புடைவைக்குள்ளேயே ஒளித்து வைத்துக்கொள்வேன். இதை ஒரு நாள் அன்னை கண்டுகொண்டு விட்டார். சிரித்துக்கொண்டே, "இதுவரைக்கும் எத்தனையோ கேசம் கொட்டிவிட்டது. நானும் அதையெல்லாம் எறிந்துவிட்டிருக்கிறேன். நீ ஒருத்தி இத்தனை ஆர்வமாக அதை எல்லாம் வைத்துக் கொள்வாய் என்று தெரிந்திருந்தால் சேகரித்து வைத்திருந்து உனக்குக் கொடுத்திருப்பேனே!" என்றார்.

ஒரு நாள் மாலை ஏழு மணிக்குப் புனித அன்னை எங்களைக் கூப்பிட்டு அனுப்பினார். அவர் எதிரில் நாங்கள் தமிழ்மொழியில் உரையாடிக் கேட்க வேண்டும் என்றார். தமிழில் சில பாடல்களும் பாடச் சொன்னார். நாங்கள் தமிழில் பேசவும் பாடவும் செய்தபோது அவர் வெகு உற்சாகமாக ஆனந்தநகை செழிக்க அமர்ந்திருந்தார்.

இன்னொரு நாள் நாங்கள் அம்மாவிடமிருந்து விடை கொள்கையில் அவர் எங்களுடன் கதவு வரையில் வந்து, ராதுவுக்காகத் தென்னாட்டு 'ரஸம்' தயாரித்துக் கொண்டு வருமாறு கூறினார். (ராது என்பது அவரிடமே வளர்ந்த அநாதை மருமாள்.) அம்மா விரும்பியவண்ணம் உடனேயே ரஸம் தயாரித்து அனுப்பினோம். அம்மா விரும்பிக் கேட்ட ஒரு தென்னிந்திய உணவுப் பொருள் அரிசி அப்பளமாகும். பெங்களூரிலிருந்து என் தந்தையார் பார்ஸல் மூலம் தூய அன்னைக்கு அப்பளம் அனுப்பி வைத்தார். ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக, அவை வந்து சேர்ந்தபோது, அம்மாவுடன் இருந்த ஆசாரமான பெண்மணிகள் பார்சலில் வந்த பண்டத்தை அம்மா உண்ணக் கூடாது என்று தடுத்து விட்டார்கள்!

ஒரு நாள் வானம் மேகமூட்டம் போட்டிருந்தது. நான் அன்னையை வணங்கி வர உத்போதனுக்குப் போயிருந்தேன். என்னை மிகுந்த பாசத்துடன்

வரவேற்றார். என் ஆரோக்கியத்தைப் பற்றி விஸ்தாரமாக விசாரித்தார். அப்போது எனக்கு அடிக்கடி வயிற்றில் திருகுவலி எடுத்து உபாதை தந்து வந்தது. அன்றைக்கு வானம் மூடி, வெயிலே இல்லாமலிருந்ததால் அம்மா, "இன்று இந்த ஊர் பெங்களூர் மாதிரியே இல்லை?" என்று கேட்டார். அதைத் தொடர்ந்து தென்னாட்டில் உள்ளவர்களை மிகவும் பாராட்டிப் பேசினார். "அவர்களுக்கு நிரம்பப் பக்தி உள்ளது" என்றார்.

1918-இல் மாத்ரு மந்திரத்து மாணவிகளை வாராணசிக்கு யாத்திரை அழைத்துச் சென்று திரும்பினோம். காசியிலும் எனக்குக் குடல் வலி கண்டது அம்மாவுக்குத் தெரிந்திருக்கிறது. அம்மாவை வணங்கி வரச் சென்ற ஒரு பெண்ணிடம் தூய அன்னையார் என் உடல்நிலை பற்றி விளக்கமாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு, அவள் மூலம் நான் உண்பதற்கென மூன்றோ நாலோ ஆரஞ்சுகள் அனுப்பி வைத்தார். எப்பேர்ப்பட்ட தாயுள்ளம்!

1918-இல் அம்மா ஜயராம்பாடியிலிருந்து கல்கத்தாவுக்கு வந்தார். எனக்குத் தீக்ஷை தருவது பற்றிய பிரஸ்தாபம் அப்போதுதான் எழுப்பப் பட்டது. உடனுக்குடனே அன்னை இணக்கம் தெரிவித்தார்.

1918 ஜூன் மாதத்தில் நிகழ்ந்த 'ரத யாத்திரை'த் திருநாளன்று தீக்ஷை வழங்கப்பட்டது. அது என்றும் மறக்கவொண்ணாத புண்ணிய தினம். என்னோடு மாத்ரு மந்திரத்தைச் சேர்ந்த வேறு மூன்று பெண்களும் அன்னையிடமிருந்து தீக்ஷை பெற்றனர். கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுப் புத்தாடை அணிந்து காலை எட்டு மணி சுமாருக்கு உத்போதனை அடைந்தோம். அங்கு வேறு பலரும் அன்று தீக்ஷை பெற வந்திருந்தனர். சடங்குகள் அனைத்தும் காலை பத்து மணிக்குள் முடிந்து விட்டன. அம்மா எந்த வரிசைக்கிரமப்படி எங்களை அழைத்தாரோ அவ்விதமே சென்று தீக்ஷை பெற்றோம். உபதேசம் வழங்கியபின் அம்மா சிற்றுண்டி அருந்தினார். மிகுதி எங்களுக்குப் பிரசாதமாக வழங்கப்பட்டது அதை உண்ணு முன், தீக்ஷை பெற்றவர் அனைவரும் அம்மாவின் புனிதப் பாதங்களில் புஷ்பாஞ்சலி செலுத்தி அவரது ஆசீர்வாதத்தைப் பெற்றோம். பிறகு மாத்ரு மந்திரத்துக்கே திரும்பிவிட்டோம். அன்று பிற்பகல் உணவும் எங்களுக்கு அம்மாவின் இருக்கையான உத்போதனிலேயே வழங்கப்பட்டது.

அன்னை ஸ்ரீசாரதா தேவியாரின் 127-ஆவது ஜயந்தி, 1979 டிசம்பர் 10-ஆம் நாள் திங்கட்கிழமை வழக்கம் போல் விமரிசையாகச் சென்னை ஸ்ரீராம கிருஷ்ண மடத்தில் நடைபெறும்.

ஒரு நாள் எனக்கு அம்மாவிடமிருந்து விசேஷ மான முறையில் ஏதேனும் அநுக்கிரகம் பெற்றாக வேண்டும் என்ற பேரார்வம் இதயத்தில் பொங்கத் தொடங்கியது. அந்த ஆசையுடனே அன்று மாலை அன்னையை வணங்கச் சென்றேன். புனிதமாதா அப்போது அடியாருக்கெல்லாம் ஸந்தேஷ் எனும் இனிப்புப் பிரசாதம் வழங்கிக் கொண்டிருந்தார். எனக்கு வழங்குவதற்காக அவர் கையில் எடுத்த ஸந்தேஷ் நழுவி அவரது புனிதத் திருவடியில் விழுந்துவிட்டது. அவர் அதைத் தம் பாதத்தி லிருந்தே எடுத்து என்னிடம் போட்டார்! இது விசேஷ அநுக்கிரகம் இல்லை எனில் வேறு எதைத் தான் அவ்விதம் சொல்ல இயலும்!

இன்னொரு நாள் அவரது தாய்மை எப்படி வெளிப்பட்டது பாருங்கள்! நான் கங்கையில் ஸ்நானம் செய்து, அப்படியே ஈரத் தலையுடன் அவரிடம் சென்றிருந்தேன். அவர் மிகுந்த பிரியத்துடன், "கேசத்தை உலர்த்திக் கொள்ளா விட்டால் ஜலதோஷம் பிடித்துவிடும், குழந்தாய்!" என்று கூறி, தாமே என் ஈர முடிச்சை அவிழ்த்து விட்டார்!

வெறும் வயிற்றோடு மகான்களிடம் சென்றால் அதிக ஆத்மலாபம் பெறலாம் என்பது வழக்கு அல்லவா? இவ்விதமே ஒரு நாள் சிற்றுண்டி உட்கொள்ளாமல் அம்மாவைப் பார்க்க ஆவலுடன் சென்றேன். எனக்கு ஆச்சரியமூட்டும் வகையில் அம்மா எடுத்த எடுப்பிலேயே, "டிஃபன் சாப்பிட வில்லையா குழந்தை?" என்று கேட்டார். பிறகு தாமே பிரசாதம் அளித்துவிட்டு என்னிடம் உரையாடினார்.

அம்மாவுக்குக் கடற்பச்சை நிறத்தில் ஒரு சால்வை உண்டு. அதைத் தைத்துச் சீராக்கு வதற்காக அன்னை என்னிடம் அனுப்பி வைத்தார். அந்தச் சால்வையின் கிழிசல்களைக் கத்தரித்துச் செப்பம் செய்து தைக்கும்போது முக்கோணமான

ஒரு பகுதியை வெட்டி நீக்கும்படியாயிற்று. அதை அன்னையின் பிரசாதமாகப் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

நாங்கள் வீட்டிலிருந்து வந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டபடியால், மாறுதலுக்காகப் பிறந்த ஊருக்குச் சென்று திரும்ப வேண்டும் என்று சுவாமி சாரதானந்தஜி மகராஜ் கருதினார். எங்கள் பிரயாணத்துக்கான ஏற்பாடுகளும் செய்துவிட்டார். எங்களுக்குப் போவதில் பிரியமே இல்லை. பெரியவர்கள் சொல்கிற யோசனையைப் புறக்கணிக்கலாகாது என்றே புறப்பட்டோம். கிளம்பும் தினத்தன்று அம்மாவிடம் ஆசி பெறச் சென்றோம். அம்மா ஆசி வழங்கியது மட்டுமின்றிக் கொஞ்சம் கற்கண்டும் கொடுத்தார். எங்களைச் சீக்கிரமே திரும்பி வந்துவிடுமாறு கூறினார்.

நாங்கள் பெங்களூர் சென்று இருபதே தினங்கள் தாம் ஆகியிருந்தன. அம்மாவுக்கு உடல்நிலை கவலைக்கிடமாகிப் படுக்கையில்கிடப்பதாகச் செய்தி வந்தது. உடனே மீளவும் கல்கத்தாவுக்குத் திரும்பினோம். அம்மா தாபஜுரத்தோடு படுக்கையில்தான் இருந்தார். இருப்பினும் நல்ல நினைவு இருந்தது. தென்னாட்டிலுள்ள பக்தர் அனைவரது க்ஷேமலாபம் குறித்தும் மிகுந்த அன்போடு விசாரித்தார்.

அன்னையின் ஆரோக்கியம் நாளுக்கு நாள் க்ஷீணிக்கலாயிற்று. அவரை எப்போதும் கவனித்துக்கொள்ள ஒரு பணியாள் அமர்த்த வேண்டியதாயிற்று. பிற்பாடு சன்னியாசினியாகிப் பரிவ்ராஜக பாரதிப்ராணா என்ற பெயர்கொண்ட ஸரளாதேவி தாம் இந்தப் பணியைச் செய்தார். அவர் சுசுருஷைக் கலையில் சிறப்பான தேர்ச்சி பெற்றிருந்தவர். மாத்ரு மந்திரில் எங்களது அறையிலேயே வசித்த தோழி அவர். மாத்ரு மந்திரப் பெண்கள் முறைபோட்டுக் கொண்டு இரவுகளில் அம்மாவுக்குப் பணிவிடை செய்தனர். என் முறை இரவு இரண்டு மணியிலிருந்து அதிகாலை நாலு மணி வரையிலாகும். தமக்குப் பணிவிடை செய்பவர்களின் பெயரை அம்மா கேட்டுத் தெரிந்துகொள்வார். என் கரங்களால் அவரது சிரத்திலிருந்து பாதம் வரையில் தடவுமாறு பணிப்பார். இதை 'ஹாத் புலாநு' என்று வங்காளிமொழியில் சொல்வர்.

ஓரிரவு அம்மாவுக்கு ஜன்னி கண்டாற்போலிருந்தது. பேலூர் மடத்துக்குப் போக வேண்டும் என்றார். பிறகு பெங்களூருக்குப் போக வேண்டும் என்றார். "உங்கள் உடம்பு குணமானபின் அங்கெல்லாம் போகலாம்" என்று ஆறுதல் சொன்னேன். இதைக் கேட்டதும் அவர் அடங்கி விட்டார்.

கொசுவலைக்குள் சென்று அம்மாவுக்கு அருகிலிருந்து பணிவிடை செய்வேன். அன்னைக்கு உடல்நிலை மிக மோசமானபோது அவர் கட்டிலிலிருந்து இறங்கிக் கீழே பாயில் படுக்கை போட்டு விட்டார். அம்மா பன்முறை என்னைத் தம் பக்கத்திலேயே பாயில் படுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறார். இது கிடைத்தற்கரிய பாக்கியம் எனினும் என் இதயம் பயத்தில் கிடந்து அடித்துக்கொள்ளும். நான் தயங்கியபடி அம்மாவின் பாய் ஓரத்தில் சுருட்டிக்கொள்வேன்.

பரிவ்ராஜக பாரதிப்ராணாவை என் அறைச் சகியாகக் கொண்டிருந்ததால் எனக்கு இன்னோர் அதிருஷ்டப் பரிசு கிடைத்தது. அந்தப் பெண்மணி தாம் தூய அன்னைக்கு உடல்பிடிப்பது, துடைத்து விடுவது, நகம் வெட்டுவது முதலிய பணிகளைச் செய்யும் பேறு பெற்றிருந்தார். அவர் அம்மாவைத் துடைக்கும்போது அம்மாவின் தோல் உரிந்து துணுக்குகளாக உதிரும். இந்தச் சருமத் துணுக்குகளையும், மற்றும் அம்மாவின் நகம் கேசம் முதலிய வற்றையும் பாரதிப்ராணா சேகரித்து வைத்திருந்தார். அவரிடம் நான் இந்த புனிதப் பொருள்களைக் கோரிய மாத்திரத்தில் அவர் அப்படியே தூக்கிக் கொடுத்துவிட்டார். இந்த பவித்திர நினைவு வஸ்துக்கள் இன்றும் பெங்களூர் மாத்ரு மந்திரத்தில் வைத்து வணங்கப்படுகின்றன. (பெங்களூருக்கு 1911–இல் அன்னையார் வந்தபோது அவரது திருவடிகளை ஒற்றி எடுத்த அடையாளமும் இந்த ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.) அம்மாவின் பழைய புடைவை ஒன்றைக் கிழித்து ஒரு முறை 'பாட்ஜுகள்' தயாரிக்கப்பட்டன. கிழிக்கிற வேலையை நான் பெற்றிருந்தேன். பாட்ஜுகள் போக, புடைவையின் மெல்லிய கரை மட்டும் மிஞ்சியது. அதையும் புனித ஞாபகார்த்தமாக வைத்திருக்கிறேன்.

தினத்துக்குத் தினம் அன்னையின் தேகநிலை மோசமாகி வந்தது மிகவும் பலஹீனம் அடைந்து விட்டார். அம்மா மகாசமாதி கொள்ள மூன்றே தினங்கள் இருந்தபோது நாங்கள் எவரும் அங்கே தங்க அனுமதிக்கப்படவில்லை. கடைசியில் ஒரு தினம் அதிகாலையில் அம்மாவின் அத்தியந்த சகியான கோலாப்-மா வந்து என் காதில் கிசுகிசுத்தார்

தவிர்க்கவொண்ணுத துயரச் சம்பவம் நேர்ந்து விட்டது.

மகாசமாதி கொண்ட மாதாவைத் தரிசித்தோம். அம்மாவின் சரீரம் தூய ஒளி வீசியது.

பேலூர் மடத்துக்கு அவரது திருமேனி எடுத்துச் செல்லப்பட்டது. நாங்களும் உடன் சென்றேம். அம்மாவின் தேகத்தை முழுக்காட்டும் பணி எங்களிடமே தரப்பட்டது. ஸ்நானம் ஆனபின், அந்தச் சரீரம் சிதையில் வைக்கப்பட்டது. அம்மாவின் பெண்கள் அனைவரும் சிதையில் நெய்யும் மற்ற எரிபொருள்களும் வார்க்கும் உரிமையைப் பெற்றேம். நான் நெய் வார்த்தபோது சிதையின் அக்கினி ஜ்வாலை என் கையைத் தீண்டிச் சுட்டு விட்டது. அதுவே அம்மா எனக்கு அளித்த கடைசி ஸ்பரிசம் எனக் கொண்டேன். அந்த வடு நீண்ட காலம் ஒரு ஞாபகார்த்தமாகவே இருந்தது.

அம்மாவிடம் தினந்தோறும் நான் சென்று வந்து கொண்டிருந்தபோது ஒரு நாள் அவர் மிகுந்த பரிவுடன், "நீ ஒருமுறையாவது ஜயராம்பாடிக்கு வர வேண்டும்" என்றூர். அம்மாவின் விருப்பம் அவர் தூல உடலை விடுத்து இருபது ஆண்டுகளுக்குப் பின்னரே பூர்த்தி ஆயிற்று. 1941-இல் ஜயராம் பாடிக்குச் சென்று இருபது தினங்கள் அங்கே தங்கியிருந்து ஆனந்தம் கொண்டேன். ✪

இது மார்கழி மாதம்!

வால்மீகி



இது மார்கழி மாதம். பன்னிரண்டு மாதங்களில் ஒன்பதாவதாக வரும் இந்த மார்கழி மாதத்தைத் தனுர்மாதம் என்பார்கள். சூரியன் தநுர் ராசியில் சஞ்சரிக்கும் காலம் இது. ஸ்ரீராமனின் தநுசு அதாவது வில் இந்த ராசியில் இருப்பதாக ஐதிகம். பல வகைகளிலும் இந்த மாதம் மிக மிகப் புனிதமானது. திருமாலுக்கு உகந்த வைகுண்ட ஏகாதசியும், சிவபிரானுக்கு உகந்த திருவாதிரை ஆருத்ரா தரிசனமும் மார்கழி மாதத்தில்தான் வருகின்றன. வில்லிபுத்தூர் ஆழ்வாரின் திருமகளான ஆண்டாள் அருளிய திருப்பாவையையும், மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவையையும் பக்திசிரத்தையோடு ஓதும் மாதம் மார்கழி மாதம்தான்.

> "மார்கழித் திங்கள்
> மதிநிறைந்த நன்னுளால்"

என்ற திருப்பாவையின் முதல் பாட்டிலேயே மார்கழி மாதத்தைச் சிறப்பிக்கிருள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்ற ஆண்டாள். இதேபோல மாணிக்க வாசகரும் திருவெம்பாவையில், "மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்" என்று பாடி, மார்கழி மாதத்தின் பெருமையை விளக்குகிருர்.

ஏன், கிறிஸ்தவர்களின் கிறிஸ்துமஸ் பண்டிகையான ஏசுநாதர் பிறந்த புனித நாளும் இந்த மார்கழி மாதத்தில்தானே வருகிறது ?

எல்லா வகைகளிலும் சிறந்த இந்த மாதத்துக்கு ஏனோ பீடைமாதம், சுப கருமங்களைச் செய்யத் தகுதியற்ற மாதம் என்ற கெட்ட பெயர் பன்னெடுங் காலமாக ஏற்பட்டிருக்கிறது. மார்கழி மாதத்தில் இந்துக்கள் திருமண வைபவங்களை நடத்தமாட்டார்கள். புதுமனை கட்டுதல், புது வீடு புகுதல், புதிய தொழில் ஆரம்பித்தல் முதலான எந்த நல்ல காரியத்தையும் செய்வது கிடையாது. செய்தால் அந்தக் காரியம் துலங்காது என்ற நம்பிக்கை வழி வழியாக இருந்து வருகிறது. என்றுலும், மாதங்களிலே மார்கழிக்கு ஒப்பான மாதம் வேறு எதுவுமே கிடையாது என்பது இறைவன் அருளிய திருவாக்கு.

பகவத்கீதையில் திருமாலின் திருஅவதாரமான கண்ணன் சொல்வதைக் கேளுங்கள் :

வேதாநாம் ஸாமவேதோஸ்மி — வேதங்களிலே நான் ஸாமவேதமாக இருக்கிறேன்.

ருத்ராணும் சங்கரச்சாஸ்மி — ருத்திரர்களிலே சிவ பிரானுகிய சங்கரர் நான்.

ஆயுதாநாம் அஹம் வஜ்ரம் — ஆயுதங்களிலே நான் வஜ்ராயுதம்.

அக்ஷராணும் அகாரோஸ்மி — எழுத்துக்களிலே நான் அகரம்.

மாஸாநாம் மார்கசீர்ஷோஹம் — மாதங்களிலே நான் மார்கழி.

இப்படிச் சிறந்தவை எல்லாம் நானே என்று சொல்லிக்கொண்டுவரும் கண்ணன், 'மாதங்களிலே நான் மார்கழி' என்கிறுர். மார்கழியின் புனிதத் தன்மையை விளக்க இதைவிட வேறு சான்று தேவையில்லே.

மார்கழிக்கு இப்படிப்பட்ட புனிதத்தன்மை எப்படி ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது?

இருள் என்பது அஞ்ஞானம். ஒளி என்பது மெய்ஞ்ஞானம். இருள் அகன்றுலே ஒளி பிறக்கும். அதேபோல அஞ்ஞானம் அகன்றுல்தான் மெய்ஞ் ஞானம் தோன்ற ஆரம்பிக்கும். ஒவ்வொருவருடைய வாழ்விலும் அஞ்ஞான இருள் அகலும் நேரம் மிக மிக முக்கியமான நேரம். வாழ்க்கையில் ஒரு புதிய கட்டத்தை ஆரம்பித்து வைக்கும் அருமையான நேரம். மெய்ஞ்ஞானம் இனிப் பிறந்தே தீரும் என்ற நம்பிக்கையை ஊட்டும் நேரம்தான் அஞ்ஞான இருள் அகலும் நேரம். இதேபோல, இரவு பகல் என்ற நியதியிலே இருள் அகன்று பகல் பிறக்கும் நேரமும் அதிமுக்கியமானதொரு காலம். இரவு கழிந்து கிழக்கு வெளுப்பதற்கும், கதிரவன் உதிப்ப தற்கும் இடையிலுள்ள இந்தக் காலத்தை உஷக் காலம் என்பர். இந்த உஷக்காலத்தைப் பிராம்ம முகூர்த்தம் என்பது வழக்கம். இந்தக் காலத்தில் எந்தக் காரியத்தைச் செய்வதாலுைம் நாள், நட்சத் திரம், திதி முதலிய எதையுமே பார்க்கத் தேவை யில்லே. சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்ட அஷ்டமி நவமி திதிகளாக இருந்தால்கூட உஷக்காலத்திற்கு அவை விலக்கானவை. நாள், நட்சத்திரம், திதி முதலிய எதையும் பாராமல் பிராம்ம முகூர்த்தமான உஷக்காலத்தில் எந்தச் சுபகாரியத்தையும் தயங் காமல் செய்யலாம்.

மனிதர்களுக்கு இந்த உஷக்காலம் எப்படியோ, அப்படியானது தேவர்களுக்கு மார்கழி மாதம். மனிதர்களுக்கு ஒரு வருஷம் என்பது தேவர் களுக்கு ஒரு நாள். நம்முடைய பகலேயும் இரவையும் போலத் தேவர்களுக்குத் தை மாதத்திலிருந்து ஆனி மாதம் வரையிலுள்ள ஆறுமாதம் பகல்நேரம். ஆடி மாதத்திலிருந்து மார்கழி மாதம் வரையிலுள்ள ஆறுமாதம் இரவுநேரம். தேவர்களின் பகல்வேளே உத்தராயணத்திலிருந்து ஆரம்பமாகிறது. நமது இரவுக்கும் பகலுக்கும் இடைப்பட்ட உஷக்காலம் போன்றது தேவர்களுக்குத் தட்சிணுயனத்துக்கும் உத்தராயணத்திற்கும் இடைப்பட்ட மார்கழி மாதம். சுருங்கச் சொல்வதாயின், அவர்களுக்கு மார்கழி மாதமே மிகப் புனிதமான உஷக்காலம். இதுவே அவர்களுடைய பிராம்ம முகூர்த்தம்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது பழமொழி. அந்தத் தைமாதம் பிறக்க வழி வகுத்துக் கொடுப்பது மார்கழி. தேவர்களுக்கோ தட்சிணுயனத்தை முடித்து உத்தராயணத்திற்கு வழிவகுத்துக் கொடுப் பது மார்கழி.


அதிகாலேயில் செய்யும் பூஜைகளுக்கும் யோகா சனப் பயிற்சிகளுக்கும் விசேஷமான பலன் உண்டு. எனவே புனித மார்கழி மாதத்தில் வேறு எந்த விதச் சிந்தனேயிலும் செயலிலும் ஈடுபடாமல் தெய்வ வழிபாடு ஒன்றிலேயே மாதம் முழுவதையும் கழிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மார்கழியை லோகாயத காரியங்களில் ஈடுபடுத்துவதற்கு அமங் கலமான மாதம் என்று நம் முன்னேர்கள் சொல்லி வைத்திருக்கிருர்கள் போலும்! *

மனிதர்களுக்கு அழிவுகாலம் நெருங்கிவிடும்போது, ஒரு சிறு துரும்புகூட அவர்களேப் பேரிடி போலத் தாக்கி நிலே குலேக்கும்.

— மகாபாரதம்

ஏமாற்றத்துடன் ஒரு வீட்டிலிருந்து வெளியேறும் விருந்தாளி, தன்னுடைய பாவங்களே யெல்லாம் அந்த வீட்டில் போட்டுவிட்டு, வீட்டுக்காரனின் புண்ணியங்களே யெல்லாம் தன்னுடன் எடுத்துச் சென்றுவிடுகிருன்.

— ஹிதோபதேசம்



சிவ சிந்தனைகள்

பிரம்மசாரி முத்துக்குமார்

ஆராய்ச்சியாளர் கருத்து

சிவம் என்ற ஒப்புயர்வற்ற இந்தத் திருநாமம் எந்தக் காலத்தில் எந்த மொழியில் முதன்முதலாகத் தோன்றியது என்பதற்கு உரிய சான்றுகள் தெளிவாக இல்லை. பண்டைய நாகரிகம் விளங்கிய நாடுகளிலெல்லாம் கடவுளைக் குறிக்கும் சொல்லாக, சிவன் என்ற சொல் ஏதோ ஒரு விதத்தில் வழங்கி வந்திருக்கிறது.

சுமார் 5000 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிவ வழிபாடு வழக்கத்தில் இருந்து வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அமெரிக்காவில் உள்ள மெக்சிகோ, பெரு ஆகிய இடங்களில் 1937-இல் சிவாலயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை 7,000 முதல் 10,000 வருடங்களுக்கு முந்தியவை என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். மேலும் சிரியா, மலேயா, இந்தோனேசியா, போர்னியோ, பாலி, கிரீட் போன்ற இடங்களிலும் ஏதோ ஒரு காலத்தில் சிவ வணக்கம் இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றனவாம்.

பழமையானது

மனித சமுதாயத்தின் நீண்ட நெடிய வரலாற்றில் உலகில் எத்தனையோ நாடுகள் தோன்றி மறைந்தன; எத்தனையோ சாம்ராஜ்யங்கள் எழுந்து அழிந்தன; எத்தனையோ நாகரிகங்கள் பிறந்திறந்தன; எத்தனை எத்தனையோ வழிபாட்டு முறைகள் மங்கிப்போய் விட்டன. ஆனால் வரலாற்றில் சிவ வழிபாடு ஒன்று மட்டும் நீடித்து நிலைத்து வருவது வியப்புக்குரிய விஷயமாகும்.

வேதங்களில் பிற்காலத்தில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரும் முக்கியக் கடவுளர்களாக விளங்கினர். இவர்கள் திரிமூர்த்திகள் எனப்பட்டனர். காலம் செல்லச் செல்ல, ருத்திரனும் வேத காலத்திற்கும் முந்தினவராகக் கருதப்படும் சிவனும் ஒருவரே என்று கொண்டனர். ஆக்கும் தெய்வம் பிரம்மா, காக்கும் தெய்வம் விஷ்ணு, அழிக்கும் கடவுள் சிவன் என்று கொள்ளப்பட்டனர். ஆனால் சைவ சித்தாந்தம் சிவனை மும்மூர்த்திகளுள் ஒருவர் என்று கருதாமல், அவர்களுக்கும் மேலாக விளங்கும் எல்லாம் வல்ல முழுமுதற் பரம் பொருளாகக் கருதுகிறது. உபநிஷதங்கள் கூறும் பிரம்மமும் சைவசமயம் கூறும் சிவனும் ஒன்றையே குறிக்கின்றன என்று சொல்லலாம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியே சிவம் என்ற திருநாமத்தால் தொழப்பட்டு வருகிறது. சிவம் என்பது, அன்பு அருள் மங்கலம் என்பவற்றைக் குறிக்கும் மிகவும் புனிதம் வாய்ந்த சொல்லாகும். சிவபெருமான் ஒப்புயர்வற்ற தியாகத்தின் சின்னமாக விளங்குகிறார். அவரது தியாகத்தை விளக்கும் வகையில் பல நிகழ்ச்சிகளைப் புராணங்கள் குறிப்பிடுகின்றன.

தியாகராஜர்

எல்லா உலகங்களுக்கும் தலைவராக விளங்கும் சிவபிரான் எல்லாவற்றையுமே தியாகம் செய்துவிட்டுத் தியாகராஜராக விளங்குகிறார். உலகப் பொருள் எதிலும் தாம் உரிமை பாராட்டுவதில்லை என்பதற்கு அறிகுறியாக அவர் பிக்ஷாபாத்திரம் ஏந்தியிருக்கிறார். அப்பெருமானுடைய ஆடையணி, உறைவிடம் ஆகிய எல்லாமே எளிமையானவை. சிவமஹிம்ன ஸ்தோத்திரத்தில் ஒரு சுலோகம் பின்வருமாறு கூறுகிறது:—

''மன்மதனை எரித்தவரே! வரமளிப்பவரே! மயானங்களில்தான் உமது விளையாட்டு. உமது பரிவாரங்களோ பிசாசுகள். சிதையிலுள்ள சாம்பலை உடலில் நீங்கள் பூசியிருக்கிறீர்கள். மனிதர்களின் மண்டையோடுகளால் உமது மாலை தொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் உமது நடத்தையெல்லாம் அமங்கலமாய் இருப்பது பிரசித்தம். அப்படி இருந்தும்கூட உம்மை நினைப்பவர்களுக்கு உத்தமமான மங்களத்திற்குக் காரணமாகத் தாங்கள் விளங்குகிறீர்கள்.''

குறைவுகளுக்கு இருப்பிடம் போலத் தோன்றும் சிவபெருமானே நிறைவுகளுக்கெல்லாம் நிலைக் களனாகத் திகழ்கிறார். மிகவும் சுலபமாகக் கிடைக்கக் கூடிய தும்பைப் பூவையும் நீரையும் அர்ப்பணித்தாலே சிவபெருமான் விலைமதிப்பற்ற விடு பேற்றையே தந்துவிடுகிறார் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆசுதோஷன் என்பது சிவபிரானின் திருநாமங்களில் ஒன்றாகும். எளிதில் பக்தர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு அருள்பாலிப்பவர் என்பது இதன் கருத்து.

சிவபெருமானின் வெவ்வேறு நிலைகள்

பரமசிவம், சொருபசிவம், தடஸ்தசிவம், சதா சிவம், மகாசதாசிவம் முதலிய பல நிலைகளில் சிவ பெருமான் விளங்குகிறார் என்று சைவசமய நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் சொருபசிவம் என்பது மிகவும் மேலான நிலையாகும். இந்த நிலை, சொல் செயல் சிந்தனைகளைக் கடந்து விளங்கும் உயர்வற உயர்ந்த நிலையைக் குறிக்கிறது. உயிர்களின்மீது கொண்டிருக்கும் எல்லையற்ற கருணை காரணமாகவே கற்பனைகடந்த சொருபசிவம் கீழ்நிலையாகிய தடஸ்த நிலையில் தோன்றுகிறது இந்த நிலையை அத்வைதம் குறிப்பிடும் நிர்க்குணப் பிரம்மத்துடன் ஒப்பிடலாம். பரம்பொருளின் இந்தத் தடஸ்த நிலைக்கு, சகளம் என்று பெயர்.

சிவபிரானுக்கு சகள நிலையில் பல மூர்த்தங்கள் உண்டென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

சுவாமி விபுலானந்தர் தாம் எழுதிய நடராஜவடிவம் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "இறைவனால் அருளிச்செய்யப்பட்ட சிவாகமங்களும் அவற்றின் வழிநூல்களும் இறைவனுக்கு உருவத் திருமேனி உண்டென்றும் அவ்வுருவத் திருமேனி 'நடராஜர், சந்திரசேகரர், உமாமகேசர், ரிஷபாருடர், கல்யாண சுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, ஜலந்தராரி, மாதங்காரி, விரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுவரர், கிராதர், கங்காளர், சண்டேசானுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கஜமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர்' என இருபத்தைந்து வகைப்படும் என்றும் கூறுகின்றன. சைவசித்தாந்த சாஸ்திரங்கள் அருபம், ருபாருபம், ருபம் என்று சிவபெருமானுக்கு மூன்று நிலைகள் இருப்பதாகக் கூறும். சிவம் சக்தி நாதம் விந்து ஆகிய நான்கினையும் அருபமாகவும், சதாசிவத்தை ருபாருபமாகவும், மகேசுவரன், ருத்திரன், மால், அயன் ஆகிய நான்கு மூர்த்தங்களையும் ருபமாகவும் அவை குறிப்பிடுகின்றன."

திருநீலகண்டர்

தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் பெறுவதற்காகப் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது பாற்கடலில் பல அபூர்வமான பொருள்கள் தோன்றின. அவற்றை அவர்கள் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டார்கள். பின்னர் ஆலகாலம் என்ற கொடிய விஷம் திரண்டு எழுந்தது. அது தேவர்களையும் அசுரர்களையும் உலகுயிர்களையும் அழிக்கப் பயங்கரமாக எங்கும் பரவத் தொடங்கியது. தேவர்கள் விஷத்திடமிருந்து தப்பியோட முயன்றார்கள்; ஆனால் அவர்களால் அது முடியவில்லை. வாழ்வை ஏற்றால் மரணத்தையும் ஏற்றாக வேண்டுமே! இன்பம் எப்போதும் துன்பம் என்னும் கிரீடத்தை அணிந்துகொண்டேதான் வரும். இறுதியில் தேவர்களும் அசுரர்களும் மகாதேவராகிய சிவனாரிடம் சென்று, தங்களுக்கு நேர்ந்துள்ள பேராபத்தைப்பற்றி முறையிட்டுக் காத்தருளும்படி வேண்டினார்கள். நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம் கொடுக்கும் நலமாகிய சங்கரர் பொங்கி வந்த அந்த விஷத்தை அப்படியே தம் கைகளில் ஏந்தி உண்டு, தேவர்களையும் அசுரர்களையும் மரணத்திலிருந்து காப்பாற்றினார். அப்போது விஷத்தைக் கண்டத்தில் நிறுத்தினார். அதனால் அவருக்குக் கறைக் கண்டன் என்று பெயர் வந்தது. அவருடைய இந்தச் செயலில் தியாகத்தின் அதி உன்னத நிலையைக் காண்கிறோம். அவர் கழுத்தில் அமைந்துள்ள நீலநிறக் கறை தியாகத்தின் சின்னமாக விளங்குகிறது. சிவாலயங்களில் நடைபெறும் பிரதோஷ தரிசனம் என்ற வழிபாடு இந்தத் திருவுருவத்தின் அருட்சிறப்பை நினைவுகூர்ந்து போற்றுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. சிவபிரானின் இந்தத் தியாகத்தின் சிறப்பை வடலூர் வள்ளலார் பின்வரும் பாடலில் அழகாக வர்ணிக்கிறார்:—

> மாலெங்கே? வேதனுயர் வாழ்வெங்கே இந்திரன் செங்
> கோலெங்கே? வானோர் குடியெங்கே? கோலஞ்செய்
> அண்டங்கள் எங்கே? அவனியெங்கே? எந்தைபிரான்
> கண்டமங்கே நீல மூறக்கால்?

ஸ்ரீசந்திரசேகர மூர்த்தம்

சிவாலயங்களில் பௌர்ணமை, அமாவாசை, மாதப்பிறப்பு முதலிய விசேஷ நாட்களில் திருவீதி வலம் வரும் மூர்த்தி சந்திரசேகரர் ஆவார். இவர் நின்ற திருக்கோலத்தில் நான்கு கைகளை உடைய

வர். வலது மேற்கையில் மழுஆயுதத்தையும், இடது மேற்கையில் மான் ஒன்றையும் தாங்கியுள்ளார். வலது இடது கீழ்க்கைகளை அபய வரதமாக வைத்திருப்பார். இப் பெருமான் சடைமுடியில் சந்திரனைச் சூடியுள்ளார். இந்த மூர்த்திக்குப் பிரதோஷநாயகர், ஸ்ரீபலிநாதர் என்ற திருநாமங்களும் உண்டு. சந்திர சேகர மூர்த்தம் ஒரு சிறந்த தத்துவத்தை உட்பொருளாகக் கொண்டிருக்கிறது. சந்திரன் கொடிய பாவத்தைச் செய்தான். ஆகவே அவனுடைய குரு சந்திரனின் அழகிய கலைகளெல்லாம் அழிந்து தேய்ந்து போகும்படி சபித்தார். இந்தச் சாபத்திலிருந்து சந்திரனை எந்தத் தேவர்களாலும் காப்பாற்ற முடியவில்லை. கடைசியில் அவன் சிவபெருமானிடம் சென்று தன் பாவத்தை மன்னித்தருளும்படி வேண்டினான். தனது பாவத்திற்காக அவன் பெரிதும் மனம் வருந்தினான். பாவியாகிய சந்திரனைச் சிவபிரான் மன்னித்தார். மூன்றாம் பிறை அளவில் குறைந்து நின்ற சந்திரனை தமது சடைமுடியில் வைத்துக்கொண்டார்.

கொடிய பாவங்களைச் செய்த பாவிகளும் உண்மையாகத் தம் பாவங்களுக்காக மனம் வருந்தி, மேலும் அத்தகைய பாவங்களைச் செய்வதில்லை என்ற மன உறுதியோடு மன்னிப்பு வேண்டினால் இறைவன் அந்த உயிர்களை மன்னிப்பார். அந்த உயிர்கள் கடைத்தேறவும் அருள்புரிவார். இறைவனின் அளவற்ற அன்புக்கு எவரும் பாத்திரராக முடியும். இறைவன் ஒருவனே பாவிகளையும் புனிதமாக்கும் பரமதயாளன்—என்ற உண்மையைச் சந்திரசேகர மூர்த்தம் உணர்த்துகிறது.

[தொடரும்]

ஆதிசங்கரரின் மானசிக சிவபூஜை

விலைமதிப்பற்ற கற்களால் ஆன ஆசனமும், நீராடி மகிழ்வதற்கு ஏற்ற குளிர்மிகு நீரும், விலை மதிப்பற்ற வகைவகையான கற்கள் பதித்த நேர்த்தியான ஆடைகளும், நறுமணம் தோய்ந்த சந்தனமும், ஜவ்வாதும், வெண்மையும், மஞ்சளும் கலந்த வண்ண மலர்களும், வில்வ இலைகளின் மத்தியில் எழிலுடன் அலங்கரிக்கப்பெற்ற சண்பக மலரும், கர்ப்பூர ஆரத்தியும் சோதியும் ஆகிய இவை அனைத்தையும் என் உள்ளத்தில் கற்பனையால் பாவித்து உனக்குச் சமர்ப்பிக்கிறேன். இந்த உலக ஜீவ ராசிகளை உண்டாக்கிய பசுபதியே! ஏ கடவுளே! தயா நிதியே! இவை அனைத்தையும் ஏற்றுக் கொள்வாயாக.

பக்குவப்படுத்திய வெண்ணெயும், பால்பாயசமும் ஐந்துவகை உணவுகளும், குளிர்மிகுந்த பால்பானகமும், கதலிப் பழங்களுடன் தயிரும், எண்ணிக்கையற்ற விதவிதமான காய்கறி வகைகளும், ருசி மிகுந்த நீரும், தாம்பூலத்துடன் கர்ப்பூரமும் ஆகிய இவை அனைத்தையும் உன்மீது கொண்ட தூய்மையான காதலாலும் பயபக்தியாலும் நவரத்தினங்கள் பதித்த தங்கத் தாம்பாளத்தில் மானசிகமாக உனக்கு சமர்ப்பிக்கிறேன். ஏ. கடவுளே! எனது எளிய காணிக்கையை நீ ஏற்றுக்கொள்வாயாக.

குடையும், இரண்டு சிறிய அழகிய சாமரங்களும், நிர்மலமான கண்ணாடியும், வீணைகானம்பேரி மிருதங்கம் இவற்றின் இனிய ஒலிகளுடன் சேர்ந்த நடனமும், பக்திமிகுந்த பல பாடல்களுடனும் உள்ளம் ஒன்றிய வழிபாடுகளுடனும் எனது அவயவங்கள் மண்ணிலே பதியும்படியான சாஷ்டாங்க நமஸ்காரமும் செய்கிறேன். ஏ மேன்மைமிகு ஆட்சி புரிபவனே! என் உள்ளத்தில் மானசிகமாக எண்ணி வழங்கும் இவை அனைத்தையும் ஏற்றுக் கொள்வாயாக.

ஏ சம்புவே! என் ஆத்மாவே நீதான். உன் பத்தினியும் ஹிமாலய புத்திரியுமான சக்தி தான் என் அறிவாக விளங்குகிறாள். எனது உணர்ச்சிமிகு அவயவமனைத்தும் உனக்கு ஏவல் செய்யும் சேவகர்கள். என் உடலே நீ வாழும் ஆலயமாகும். என் புலன்கள் செயல்படுவதெல்லாம் உன்னைத் தோத்திரம் செய்யவேயாகும். என் உறக்கமே உன்னைக் காணும் பேரின்பமான சமாதிநிலையாகும். நான் இடமிருந்து வலமாக நடந்து செல்வதெல்லாம் உன் ஆலயத்தை வலம்வருவதேயாகும். நான் பேசுபவை அனைத்தும் உன்னைப்பற்றிய புகழ்ச்சிப் பாடலேயாகும். நான் எந்த வேலை செய்தாலும் அது உன்னைத் தொழுவதேயாகும்.

கால்களினாலோ கைகளினாலோ பேச்சினாலோ உடலினாலோ கண்களினாலோ காதுகளினாலோ எண்ணத்தினாலோ தெரிந்தோ தெரியாமலோ நான் செய்த பாவங்களையெல்லாம் மன்னித்துவிடு. ஏ! கருணைக்கடலே! உனக்கு மங்களம் உண்டாகட்டும். கடவுள்களுக்கெல்லாம் கடவுளே! உனக்கு மங்களம் உண்டாகட்டும்.

தமிழாக்கம் : S. திலகவதி



தன்னுயிர் ஈந்த உத்தமர்

நரேந்திரன்

ராஜபுத்திரர்கள் விஜயதசமியன்று வேட்டைக்குச் செல்லுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அதை அனுசரித்து மேவார் நாட்டின் ராணு பிரதாப்பும் அவருடைய தம்பியான சக்திசிம்மனும் சிப்பாய்களுடன் ஒரு விஜயதசமியன்று வேட்டைக்குப் புறப்பட்டார்கள்.

சகோதரர் இருவரும் ஒன்ருகவே வேட்டையாடிக்கொண்டிருந்தார்கள். தற்செயலாக இருவரின் பார்வையும் ஒரே மானின்மீது விழுந்தது. மானைப் பார்த்த மறுகணமே அதைக் குறிபார்த்து இருவரும் அம்பெய்தனர். அன்பு தைத்த மான் பூமியில் விழுந்து இறந்துவிட்டது. ஆனல் இப்போது, 'யாருடைய அம்பு பட்டதனல் இந்த மான் இறந்தது?' என்ற பிரச்னை எழுந்தது. ராணு பிரதாபசிம்மனே தாம் எய்த அம்பால்தான் மான் இறந்துவிட்டது என்ருர். தம்பி சக்திசிம்மனே தானே அந்த மானைக் கொன்றதாக அடித்துக் கூறினன்.

இவ்விதம் வாய்ச்சண்டையில் ஆரம்பித்த விஷயம், அவர்கள் இருவரும் தங்களுடைய உறையிலிருந்த உடைவாளை உருவி வாட்போர் புரியும் அளவிற்கு வளர்ந்துவிட்டது!

சகோதரர் இருவரும் வாட்போர் புரிவதைத் தூரத்திலிருந்து ராஜகுரு பார்த்தார். அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. உடனே அவர், "நிறுத்துங்கள்! சண்டை வேண்டாம்!" என்று உரத்த குரலில் கூவியபடியே ஓடோடி வந்தார். சகோதரர்களின் அருகில் வந்து அவர்கள் இருவரையும் பார்த்து ராஜகுரு, "குழந்தைகளே! நம் நாடு தற்போது எத்தகைய ஆபத்தான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டு தவிக்கிறது! பிற மதத்தவர்களின் படையெடுப்பால் நாள்தோறும் நம் மக்கள் எவ்வளவு அல்லல்படுகிருர்கள்! இப்படிப்பட்ட இக்கட்டான சமயத்தில் மேவார் நாட்டின் முக்கிய இரண்டு தூண்களாகிய நீங்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொண்டு மடியத் துணிந்துவிட்டீர்களே!" என்று சொல்லிச் சமாதானப்படுத்த முயன்ருர்.

ராஜகுரு ராணு பிரதாப்பிடம், "சக்திசிம்மன் சிறுவன்தானே! அவனே அந்த மானைக் கொன்றதாக ஒப்புக்கொள்ளேன்" என்று சொல்லிப் பார்த்தார். சக்திசிம்மனிடம், "உன் மூத்த சகோதரனுக்குக் கௌரவம் அளிக்கும் வகையில் அவரே அந்த மானைக் கொன்றதாக நீதான் நினைத்துக்கொள்ளேன்" என்று கூறினர். ஆனல் அரண்மனை ராஜகுருவின் வார்த்தையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று! கோபம்

வந்தால் சிறந்த அறிவாளியும் முட்டாளாகிவிடுகிருன். எனவே, சகோதரர் இருவரும் தங்கள் கருத்தை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை.

ராஜகுருவுக்குச் சகோதரர்களின் போக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுத்தது. அரசகுமாரர்கள் இருவரும் சண்டையிட்டுக்கொண்டு மடிவதைக் காண அவர் விரும்பவில்லை. உடனே ராஜகுரு ஓர் உடைவாளை உருவினுர். உருவிய வாளுடன் அவர் ஒருவரை ஒருவர் கொல்ல விரும்பும் இரண்டு சகோதரர்களுக்கும் நடுவில் போய் நின்றுகொண்டார். "சகோதரர்களே! உங்களுடைய இன்றைய சண்டைக்குக் காரணமாகிய கோபம் என்னும் பிசாசு மனித ரத்தம் குடிக்காமல் தாகத்தைத் தணித்துக்கொள்ளாது என்று தோன்றினுல், இதோ இந்த அந்தணனின் ரத்தத்தை அது குடிக்கட்டும். நான் மேவார் நாட்டின் சோற்றைத் தின்று வளர்ந்தவன். மேவார் நாட்டின் மண்ணினுல் உருவாகியது என்னுடைய இந்த உடல். ஆகையால் என் கண்ணெதிரே மேவார் நாடு குடும்பச் சண்டையில் அழிந்துபோவதை என்னுல் பார்த்துக்கொண்டிருக்க முடியாது" என்று சொல்லிக்கொண்டே ராஜகுரு சத்தியால் தமது வயிற்றில் ஓங்கிக் குத்திக்கொண்டு விட்டார்.

சகோதரர் இருவரும் செய்வதறியாமல் திகைத்து நின்றனர். அவர்கள் இருவருக்கும் இடையில் ரத்த வெள்ளத்தில் ராஜகுருவின் உடல் தரையில் விழுந்து கிடந்தது. முன்பின் யோசிக்காமல் சண்டை போட்டுக்கொண்டதையும், ராஜகுருவின் விவேகமான புத்திமதியையும் கேட்காமல் மூளை மழுங்கி அநியாயமாக ஓர் உயிரைப் பலி வாங்கிய கொடுமையையும் நினைத்து வருந்தி அரசகுமாரர்கள் வெட்கத்துடன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்றனர்.

இவ்விதம் ராஜகுருவின் நாட்டுப்பற்றினுல் சகோதரர்கள் ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்ளாமல் தப்ப முடிந்தது. தமது உயிரையும்விட நாட்டையும், அரச குடும்பத்தின் ஒற்றுமையையும் பாதுகாக்க விரும்பிய ராஜகுருவின் தியாகத்தை என்றென்றும் நினைவில் கொள்வோமாக! ★

மனிதன் தான் எண்ணியபடி செய்து முடித்தால் அது மதியின் வெற்றி என்கிருன். வேறு விதமாக முடிந்தால், அது விதியின் செயல் என்கிருன்.

— ரமண மகரிஷி

எங்கே பெண்களுக்குக் கௌரவம் அளிக்கப்படுகிறதோ, அந்த இடத்தைப்பற்றிக் கடவுள்களும் திருப்தியடைகிருர்கள். அவர்கள் கௌரவிக்கப்படாத இடங்களில் எந்தப் புண்ணிய காரியமும் பலன் தராது.

— மனு

தனக்கு நீர் கிடைக்கவில்லை; மற்றவர்களுக்குப் பால் தானம் செய்கிருன். தன் மனம் தைரியம் அடையவில்லை; மற்றவர்களுக்குத் தைரியம் ஊட்டுகிருன். உலகில் சொல் எல்லாம் சக்கைதான். செய்கைதான் சாரமானது. செய்கை வலுவுள்ளது. பிறவிக் கடலில் இறங்கிக் கரையேற்றும்.

— கபீர்

அற்புதத் திருவந்தாதி விளக்கம் :



இறைவன் என்னும் மலை

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

மிகப் பெரிய சான்றோர்களை மலை என்று சொல்வார்கள். "மலை போல நீ இருக்கும்போது எனக்கு என்ன குறை?" என்று உலக வழக்கில் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். சிறந்த ஆசிரியர்களுக்கு மலையை உவமை கூறுவர்.

"அளக்கல் ஆகா அளவும் பெருமையும்
துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளர்தரும் வண்மையும் மலைக்கே"

என்பது மலையின் சிறப்பைச் சொல்லும் சூத்திரம். இந்த இலக்கணங்கள் யாவும் சான்றோர்களிடம் பொருந்தியிருக்கும்.

இறைவனிடம் மிகச் சிறப்பாக அந்த இயல்புகள் அமையும். அவன் அளக்கல் ஆகா அளவுடையவன். எந்த அளவைகளாலும் அளந்து வரையறை செய்ய முடியாதவன் அவன். ஆதலால் அவனை அப்பிரமேயன் என்று கூறுவர். துளக்கலாகா நிலை என்றது, சலனமற்ற இயல்பைக் கூறுவது. இறைவன் அசஞ்சலன். தோற்றம் சிறந்து நிற்பவன் இறைவன். வறப்பினும் வளந்தரும் வண்மையும் உடையவன் அவன்; அதாவது எங்கே கருணை வற்றிப் போனாலும் அவனுடைய கருணை வற்றாது. வற்றாத பெருங் கருணையை உடையவன் அவன். "நீ மறந்தாய் எனினும், அகிலமெலாம் அளித்திடும் நின் அருள் மறவாதென்றே, இன்னும் மிகக் களித்திங்கே இருக்கின்றேன்" என்று அந்த அருளைச் சிறப்பித்துப் பாடுவார் அருட்பிரகாச வள்ளலார்.

இத்தகைய இயல்புகளை உடைமையால் இறைவனை, "மலையே" என்று போற்றுவது அன்பர்கள் வழக்கம். "வேடர் குலப்பிடிதோய் மலையே" என்று முருகப்பெருமானைச் சொல்வார் அருணகிரிநாதர். "மாலமுதப் பெருங்கடலே, மலையே நின்னைத் தந்தனை" என்பது மாணிக்கவாசகர் திருவாக்கு. இப்படி எந்த அடையும் இன்றி, 'மலையே' என்று அழைத்து விண்ணப்பித்துக் கொள்ளும் இடங்கள் அருளாளர் வாக்கில் பல பல.

காரைக்கால் அம்மையாரும் இறைவனை வேறு வகையில் மலை என்று சொல்கிறார். மலையின் தோற்றத்தையும் இறைவனின் திருக்கோலக் காட்சியையும் ஒப்பிட்டுச் சொல்லுகிறார். அவன் மலையைப் போன்ற தோற்றம் அளிக்கிறான். அவனிடத்தில் உள்ள பொருள்கள் மலையை நினைப்பூட்டுபவையாக இருக்கின்றனவாம். ஆகையால், 'இறைவன் திருவடிவத்தில் ஒரு மலையைப் போலக் காட்சி அளிக்கிறான்' என்று சொல்ல வருகிறார்.

மலையில் மரங்களும் விலங்குகளும் பாம்பு முதலிய ஊர்வனவும் இருக்கும். உயர்ந்து ஓங்கிய மலை முகட்டில் இரவில் சந்திரன் தோன்றுவான். ஒரு புறம் பாம்பு ஓடும்; ஒரு புறம் மென்மையான மான் தாவும்; பின்னும் ஒரு புறம் வன்மையான புலி பாயும். ஒருபக்கத்தில் அருவி வீழும். இத்தகையவற்றை இறைவனிடமும் காணலாம்.

அவன் திருவாபரணமாகப் பாம்பை அணிந்திருக்கிறான். தலையில் சந்திரனைச் சூடியுள்ளான். தாருகாவனத்து முனிவர் அவனைப் பொருவதற்கு அனுப்பிய மானை ஏந்தியிருக்கிறான். அவர்கள் அனுப்பிய புலியை உரித்து அதன் தோலை உடுத்திருக்கிறான். அதை மட்டும் பார்த்தால் புலியோ என்று ஐயுறும்படி இருக்கும். அவனுடைய திருமுடியிலிருந்து கங்கை அருவி போல வீழ்கிறது. பகீரதனுக்காக அவ்வாறு விழச் செய்தான். இவை எல்லாம் இருப்பதனால் அவன் மலையைப் போலத் திகழ்கிறான்.

பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம்பயின்று தாழருவி தூங்குதலால்.

இவ்வாறு மலைக்கும் இறைவனுக்கும் உள்ள ஒப்புமையைச் சொன்னார்.

இறைவன் திருமேனி செம் பொன் வண்ணம் உடையது; "பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்" என்பது பொன்வண்ணத்தந்தாதி. அந்தப் பொன்னிறம் ஒளி ஓங்கிச் சுடர் விடுகிறது. அவன் நெற்றியிலே

கண்ணை உடையவன். அது அவனுக்கென்றே அமைந்த சிறப்பான அடையாளம்.

ஆம்பொன்

உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுதலான்.

அவனுடைய அழகுடைய தெய்வத் திருவடிவம் மேலே சொன்ன பொருள்களை உடைமையால், அவனை மலை என்றே சொல்லிவிடலாம். யாவரும் விரும்பும் மலை அவன். பாம்பும் புலியும் இருந்தாலும் அவனை அன்பர்கள் விரும்புவார்கள்.

கோலத்

திருவடிவில் மேய சிலம்பு.

மற்ற மலைகளில் பாம்பும் புலியும் இருந்தால் அந்த இடங்களுக்கு யாரும் விரும்பிச் செல்லமாட்டார்கள். இறைவனே தன்னிடம் உள்ளவற்றையெல்லாம் கொடுமை இல்லாதவையாகச் செய்து விடுபவன் ஆகையால் அவனை அணுகுவதற்கு அன்பர்கள் விரும்புவார்களேயன்றி, அஞ்சி நடுங்கமாட்டார்கள்.

இவற்றையெல்லாம் சேர்த்து அம்மையார் பாடுகிறார்.

பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம்பயின்று தாழ்அருவி தூங்குதலால்—ஆம்பொன்
உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடிவின் மேய சிலம்பு.

[அணிகளாகிய பாம்பும், சந்திரனும், மென்மையான மானும், பாய்கின்ற புலியும் தாம் அவனிடத்தில் பல காலம் இருந்து பயின்று, கீழே விழுகிற கங்கையாகிய அருவி ஒழுகுவதால், பொன்னுன நிறத்தையுடைய திருவுருவத்தில் சிறந்து நிற்கின்ற ஒளியைச் சேர்ந்தவனும், நெற்றியிலே கண்ணை உடையவனுமாகிய சிவபெருமான் தன்னுடைய அழகிய தெய்வத் திருவடிவினுல், அன்பர்கள் விரும்பிய மலையாக உள்ளான்.

பாம்பு, சிவபிரான் அணிகலனுக அணிந்தது. மதி அவன் திருமுடியில் சூடியது. பாய்புலி அவன் உரித்து ஆடையாக அணிந்தது; "புலித்தோலை அரைக்கு அசைத்து" என்பது தேவாரம். தாழ் அருவி – கீழே விழும் அருவி; கங்கை. தாள் அருவி என்பது ஒரு பாடம். தூங்குதலால் — கீழே தொங்குவது போல இடையறாது பாய்வதால். ஆம் பொன் உரு வடிவில்-ஆகிய பொன் நிறத்தைப் பெற்ற வடிவத்தில். வடிவில் ஒளி சேர் கண்ணுதலான். கண்ணுதலான்—நெற்றியில் கண்ணையுடையவன். கோலம்—அழகு. திரு—தெய்வத்தன்மை. மேய—மேவிய; அன்பர்கள் விரும்பிய. சிலம்பு—மலை.]

இது அற்புதத் திருவந்தாதியில் வரும் 67–ஆம் பாடல். *

வேண்டுகோள்

70 ஆண்டுகளுக்கு முன்பு மகேச குமார சர்மா என்பவர் 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்' என்ற நூலைத் தமிழில் எழுதினர். இந்நூல் இப்போது கிடைப்பதில்லை. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றிய இந்த நூலில் சுவாமி இராமகிருஷ்ணனந்தரின் முன்னுரை இடம் பெற்றுள்ளது. அந்த நூல் அன்பர்கள் எவரிடமாவது இருப்பின், சுவாமி இராமகிருஷ்ணனந்தர் வழங்கியுள்ள முன்னுரையை எழுதியனுப்பக் கோருகிறோம்.

– ஆசிரியர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியலாயம்

வாசகர்களுக்கு

1980-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் சந்தா விவரங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. இந்த இதழ் அட்டையின் இரண்டாம் பக்கத்தில் புதிய சந்தா விவரம் கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

—நிர்வாகி

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்


சிங்கப்பூரும் மலேசியாவும்

சுவாமி தன்மயானந்தர்

சென்னையிலிருந்து வங்காளவிரிகுடாக் கடலின் மறுபுறத்தில் சுமார் மூவாயிரம் மைல் தூரத்தில் அமைந்திருக்கும் சிறிய தீவு சிங்கப்பூர். அதை அடுத்து, வளம் பொருந்திய நாடாகிய மலேசியா அமைந்திருக்கிறது. சுதந்திரம் பெறுவதற்கு முன்பு சிங்கப்பூர், மலேசியா ஆகிய இரண்டும் மலேசியா என்ற பெயரில் ஒரு நாடாக இருந்தன.

கடலின் இந்தப் புறத்தில் இருக்கும் இந்தியாவுக்கும் மறுபுறத்தில் இருக்கும் சிங்கப்பூர் மலேசியாவிற்கும்தான் எவ்வளவு வேற்றுமை!

சுவாமி விவேகானந்தர் கூறியவை இன்றும் நமது காதுகளில் ஒலிக்கின்றன. "இந்திய பூமிதான் ஆன்மிகத்திற்கு உறைவிடம். இந்திய பூமியே புனிதம் வாய்ந்தது. இந்த உலக மக்கள் முழு வாழ்க்கை வாழ வேண்டுமானால், கொடுக்கல்-வாங்கல் கலையின் இரகசியத்தை அறிந்துகொண்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டும். நம்மிடமுள்ள வேதாந்தம், ஆத்மசக்தி ஆகியவற்றை மேலைநாட்டாருக்கு வழங்க வேண்டும். மேலைநாட்டு மக்களின் வாழ்க்கையில் சிறப்பாக இடம் பெற்றிருக்கும் பணி செய்யும் முறை, தன்னம்பிக்கை, விஞ்ஞான முன்னேற்றங்கள் ஆகியவற்றை நமது இந்திய வாழ்க்கையில் இடம் பெறும்படி செய்ய வேண்டும். இதன் மூலம் ஒருவர் மற்றவருக்குத் தம்மிடமுள்ள பண்பாடடைந்த கலையை வழங்க முடிகிறது; நாளடைவில் மனித சமுதாயம் முழுத்தன்மையை மலரச் செய்ய முடியும்."



கடின உழைப்பு, ஒழுக்கம், ஊக்கம், கட்டுப்பாடு, தேசப்பற்று, அரிய பெரிய சாதனைகளைச் சாதிக்க மேற்கொள்ளும் விடாமுயற்சி ஆகியவற்றைச் சிங்கப்பூர் மக்களிடம் கண்கூடாகக் காண்கிறோம்.


சிங்கப்பூர் ஒரு சிறிய நாடு. சென்னை மாநகரத்தின் பாதியளவு இருக்கும் என்று அதைச் சொல்லலாம்.

சிங்கப்பூரைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருக்கிறது. ஆகவே அங்கு நிலப்பிரச்னை பெரிய பிரச்னையாக இருக்கிறது. குடிதண்ணீரைக் கூட இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஒரு சிறிய ஊசியிலிருந்து பெரிய விமானம் வரை, எல்லாவிதப் பொருள்களையும் அங்கு இறக்குமதி செய்கிறார்கள். சிங்கப்பூர் துறைமுகத்தில் சுங்கவரிக் கட்டுப்பாடுகள் இல்லை. அது காரணமாக, உலகின் பல பாகங்களிலிருந்தும் பலவிதப் பொருள்கள் தாராளமாக அங்கு வந்தபடியே இருக்கின்றன.

சிங்கப்பூர்வாசிகளில் எண்பது சதவிகிதம் சீனர், பத்து அல்லது பன்னிரண்டு சதவிகிதம் மலேயர்கள். மற்றவர்கள் இந்தியர்கள். இந்தியர்களிலும் தென்னிந்திய மக்களே அங்கு அதிகம். சிந்தியர்களும் குஜராத்தைச் சேர்ந்தவர்களும் சிறுபான்மையினராக அங்கு இருக்கின்றனர்.

கடும் உழைப்பு, பணம் சம்பாதிப்பது, லௌகிக இன்பங்களை நன்றாக அனுபவிப்பது ஆகியவைகளே சீன மக்களைப் பொறுத்தவரையில் வாழ்க்கை முறையாக அமைந்துள்ளன. மதத்தைப்பற்றியோ உயர்ந்த தத்துவங்களைப் பற்றியோ அவ்வளவாக அவர்களுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அவர்களிடம் உயர்ந்த கலாசாரத்தை எதிர்பார்ப்பது ஏமாற்றத்தைத் தரக்கூடும். மேலைநாட்டு மக்களின் வாழ்க்கை முறை இவர்களை நன்றாக இறுக்கிப் பற்றிக்கொண்டிருக்கிறது. ஆசியாவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இவர்களின் உணவு, உடை, வாழ்க்கை முறை, விஞ்ஞானக் கருவிகளைக் கையாளும் முறை ஆகியவை நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. ஒரு சில நாள் தங்கி இவர்களின் வாழ்க்கை முறையை நன்றாக ஊடுருவிப் பார்க்கும்போது, இவர்களின் வாழ்க்கையில் கடவுளுக்கு எந்தவித இடமும் இல்லை என்பது தெளிவாக விளங்குகிறது! பணமும் உலக இன்பங்

களும் தாராளமாகக் கிடைக்குமானுல், எவ்வளவு பேருக்குக் கடவுளின் நினைவு வரும்? என்ருலும் இந்த நிலைமை சிங்கப்பூர் சீன மக்களின் அக வாழ்க்கையைக் குலைத்து நிம்மதியற்ற நிலையை உண்டாக்கியிருக்கிறது. புற உலகில் கோலாகலம் இருப்பினும்



அக உலகில் இருள் நிறைந்த நிலையில் மனநிம்மதியின்றி அவர்களின் வாழ்க்கைப் பயணம் நடந்து கொண்டிருக்கிறது.

ஏறத்தாழ இதே நிலைமைதான் மலேசியாவிலும் இருந்து வருகிறது. ரப்பர், டின், பெட்ரோல் ஆகியவைகள் இங்கிருந்து ஏற்றுமதி ஆகின்றன. நிலப் பரப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மலேசியாவில் மக்கள் தொகை குறைவு. ஏழைகளே இல்லை என்று சொல்லத் தக்க வகையில் மக்கள் எல்லாவிதச் செல்வச் செழிப்புக்களுடன் திகழ்கிருர்கள். அனேகமாக அனைவரும் கார் அல்லது மோட்டார் வைத்திருக்கிருர்கள். டெலிவிஷன், ரேடியோ, ரிஃப்ரிஜிரெடர், மற்றும் பலவித நவீனப் பொருள்களும் அங்கு வாழ்க்கைக்கு அத்தியாவசியம் என்ற இடத்தைப் பெற்றிருக்கின்றன.

மலேசியா ஒரு முஸ்லிம் நாடு. ஆனுல் இங்கு வியாபாரத்தில் பெரும் பகுதி சீனர்களிடம் இருக்கிறது. இவர்கள் திறமைசாலிகள், உழைத்து முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் நிறைந்தவர்கள்.

மலேசியாவில் நாற்பது சதவிகிதம் சீனர்களும், அறுபது அல்லது ஐம்பது சதவிகிதம் இந்தியர்களும் வாழ்கிருர்கள். சில இடங்களில் சீனர்களின் தொகை அதிகமாகவும் மற்றும் சில இடங்களில் குறைவாகவும் இருக்கிறது.

பினங், சிரம்பன், இபோ என்ற இடங்களில் இந்தியர்கள் அதிகமாகவும் மற்ற இடங்களில் குறைவாகவும் வாழ்கிருர்கள். இலங்கையைச் சேர்ந்த இந்தியர்களும் இங்கு அதிகமாக இருக்கிருர்கள்.

இந்தியர்களில் பெரும்பாலோர் வாணிபத்தில் ஈடுபட்டுள்ளனர். மருத்துவம், அரசியல், இலக்கியம் போன்ற துறைகளிலும் இந்தியர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள். அரசாங்க அதிகாரிகள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர் என்றும் பல இந்தியர்கள் பணிபுரிந்து வருகிருர்கள். பல இந்தியர்கள் நல்ல பணவசதி படைத்தவர்களாகவும் விளங்குகிருர்கள்.

மலே, சீனம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளும் மலேசியாவில் அரசியல் அங்கீகாரம் பெற்ற மொழிகளாகும்.

சிங்கப்பூர், மலேசியா ஆகிய இடங்களில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக இராமகிருஷ்ண—விவேகானந்த இயக்கத்தின் பணிகள் நடந்து வருகின்றன.

சிங்கப்பூரில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் கிளை 'ஸ்ரீராமகிருஷ்ண ஆச்ரமம்' என்ற பெயரில் இயங்கி வருகிறது. நீண்ட புல்வெளிகள், மரங்கள், செடி கொடிகள் சூழ இந்த ஆச்ரமம் அழகுடன் பொலிகிறது. இங்கு ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அழகிய கோவில், நூல்நிலையம், ஏழை அநாதை மாணவர் விடுதி, விருந்தினர் விடுதி, கலாசார நிலையம் ஆகியன அமைந்திருக்கின்றன. நாள்தோறும் ஸ்ரீகுருதேவருக்கு நித்திய வழிபாடு, பஜனை ஆகியவை ஆச்ரமத்தில் விமரிசையாக நடந்து வருகின்றன.

இது போலவே பினங்கிலும் ஸ்ரீராமகிருஷ்ணரின் பெயரால் ஓர் ஆச்ரமம் இயங்கி வருகிறது, மக்களுக்கு வரப்பிரசாதம் போன்று அமைந்திருக்கும்



இந்த ஆச்ரமத்தின் சார்பாக நடத்தப் பெறும் மாணவர் விடுதியில் ஐம்பத்தைந்து அநாதை மாணவர்கள் பயின்று வருகிருர்கள். இந்த மாணவர் விடுதி The Hindu Boys' Home என்றும் அழைக்கப்படுகிறது.

சிங்கப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் கிளை 1980-ஆம் ஆண்டு தனது ஐம்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் சிங்கப்பூரில் உலகப் புத்தகக் கண்காட்சி ஒன்று பெரிய அளவில் நடைபெற்றது. அந்தக் கண்காட்சியில் ஸ்ரீராம கிருஷ்ண மிஷனின் வெளியீடுகளைக் கொண்ட 'புக் ஸ்டால்' ஒன்றும் இடம் பெற்றது. இந்தப் புத்தகக் கடைக்குச் சீனர்கள், மலேயர்கள், இந்தியர்கள் ஆகியோர் வருகை தந்திருந்தனர். பொதுவாக அவர்களுக்கு யோகம், தியானம் ஆகியவைபற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது.

கோலாலம்பூரில் 'ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த சொசைடி' என்ற பெயரில் ஒரு நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனத்தின் மூலம் கோலாலம் பூரில் ஸ்ரீராமகிருஷ்ண இயக்கம் ஆன்மிகத் தொண்டு புரிந்து வருகிறது.

கோலாலம்பூரிலிருந்து சுமார் நாற்பது கிலோ மீட்டர் தூரத்தில் சிரம்பன் என்ற ஊர் இருக்கிறது. இங்கும் ஸ்ரீராமகிருஷ்ணரின் பெயரால் பக்தர்கள் ஒரு சங்கத்தை நடத்தி வருகின்றனர். இந்தச் சங்கத்தின் சார்பாகப் பூஜை, கீதை வகுப்புகள், ஆன்மிகச் சொற்பொழிவுகள் ஆகியவைகள் தொடர்ந்து நடத்தப்பெறுகின்றன.

மலாக்கா, ஜோஹர்பலோ என்ற இடங்களிலும் ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த பக்தர்கள் அடிக்கடி கூடி, பஜனை, ஆன்மிகச் சொற்பொழிவுகள் ஆகிய வற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீ அன்னையார், சுவாமிஜி ஆகியோரின் கருத் துக்கள் பரவி வருகின்றன. அந்த நாட்டு மக்கள் தங்களின் ஆன்மிக முன்னேற்றத்திற்கு ஸ்ரீராம கிருஷ்ண மிஷனை ஆவலோடு எதிர்நோக்கி யுள்ளனர்.

இராமகிருஷ்ண மடத்தின் துறவியர்களிடம் மலேசிய பக்தர்களின் ஒரே வேண்டுகோள் என்ன வென்றால், "நீங்கள் அடிக்கடி இங்கு வந்து எங்களுக்கு ஆன்மிகக் கருத்துக்களை அளிக்க வேண்டும். வெளியுலகக் கவர்ச்சியில் சிக்கிக் கொண்டிருக்கும் எங்களுக்கு நீங்கள் வழி காட்ட வேண்டும்" என்பதுதான்.

வெளியுலக வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந் திருக்கும் மக்களுக்கு அக வாழ்க்கை இன்றியமை யாதது. அது இல்லாத நிலையில் வாழ்க்கை முழுமை பெறாததுடன் பரிதாபகரமாகவும் ஆகிவிடும்.

செய்திகள்

திருவண்ணாமலையில் ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த மன்றத்தின் துவக்க விழா

வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவண்ணா மலையில்ஆர். அண்ணாமலை அவர்களைத் தலைவ ராகவும் அ. சம்பத் அவர்களைத் பொருளாள ராகவும் கொண்டு அக்டோபர் 26-ஆம் நாள் மாலை யில் ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த மன்றத்தின் துவக்க விழா விமரிசையாக நடைபெற்றது. விழா வின் நிகழ்ச்சிகள் ஸ்ரீ அருணாசலேசுவரர் ஆலயத் தில் அமைந்திருக்கும் சக்தி விலாச சபா மண்டபத் தில் நடைபெற்றன.

சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி தன்மயானந்தஜி மகராஜ் அவர்கள் மன்றத்தைத் துவக்கி வைத்து சிறப்புரை நிகழ்த் தினார். ஸ்ரீமத் சுவாமி அமலாத்மானந்தர் ஆங்கிலத் தில் உரையாற்றினார்.

மற்றும் பேராசிரியர் ஏ. சுப்பிரமணியம், பேராசிரி யர் எஸ். ஆர். நடராஜன் வித்துவான் அ. பாண்டு ரங்கன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மா. ஜோதி அவர்கள் அன்னை ஸ்ரீசாரதாதேவியாரைப் பற்றிய தமது கவிதையைப் படித்தார்.

விழாவின் ஆரம்பத்தில் ஆர். அண்ணாமலை அனை வரையும் வரவேற்றுப் பேசினார். அ. சம்பத் அவர் களின் நன்றியுரையுடன்விழா இனிது நடந்தேறியது.

இராமபிரானும் கண்ணபிரானும்

விவேகானந்த தாசன்



ஒரு சமயம், பாசுபத அஸ்திரம் பெறுவதற்காக அர்ஜுனன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்ய முடிவு செய்தான். அதன் பொருட்டுத் தனியாகத் தேரில் கிளம்பிய அவன், காட்டுவழியில் பல மிருகங்களை வேட்டையாடியபடி பகல்நேரத்தில் ராமேசுவரம் வந்தடைந்தான்.

அங்கு அவன் கடலில் நீராடினான். 'மாத்தியான்னிகம்' என்று சொல்லப்படும் பகல் வழிபாட்டை முடித்துக் கொண்டான். பிறகு கர்வத்துடன் தேரைக் கடற்கரையில் அங்கும் இங்குமாக உற்சாகத்துடன் ஓட்டிச் சென்றான்.

அப்போது, அங்கே காட்டிலிருந்த மலைமீது ஸ்ரீராமபக்த அனுமான் தவம் செய்துகொண்டிருந்தார். 'ராம ராம' என்று ஜபத்தில் ஆழ்ந்திருந்த ஆஞ்சனேயரைத் தற்செயலாக அர்ஜுனன் அங்கே கண்டான்.

அவரைப் பார்த்த அர்ஜுனன் கர்வத்துடன், ''ஏய் கிழக் குரங்கே! நீ யார்? உன் பெயர் என்ன?'' என்று கேட்டு அதட்டினான்.

ஆஞ்சனேயர் புன்முறுவலுடன் அமைதியான குரலில், ''இராமபிரான் கற்களாலேயே சேது சமைத்து இலங்கை சென்று ராவணனைக் கொன்றார். அத்தகைய புகழுக்கு உரிய ராகவனின் அடிமை நான். என்னை அனுமன் என்றும், வாயுபுத்திரன் என்றும் சொல்லுவார்கள்'' என்றார்.

ஆஞ்சனேயர் இராமபிரானைப் பெருமைப்படுத்தி அவ்விதம் கூறியதைக் கேட்ட அர்ஜுனனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவன் கேலியான குரலில், ''அட குரங்கே! உன் ராமன் பராக்கிரமசாலியாக இருந்தால் கடலிலே அணைகட்டும் சிரமத்தை வீணாக ஏன் மேற்கொண்டார்? அவர் உண்மையிலேயே பெரிய வில்லாளியாக இருந்திருந்தால், தமது அம்புகளைக் கொண்டே ஏன் பாலம் அமைத்துத் தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டிருக்கக் கூடாது?'' என்று அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டே கர்வத்துடன் கேட்டுவிட்டான்.

அதுவரையில் அமைதியாக இருந்த ஆஞ்சனேயருக்கு அர்ஜுனன் ராமரை அவமரியாதையாகப் பேசியதும் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. தம்மையே அவமதித்திருந்தால் கூட அவர் பொறுத்துக் கொண்டிருப்பார். ஸ்ரீராமரை ஒருவன் கேலியாகப் பேசினால் அவரால் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? ஆகவே அவர் கோபத்துடன், ''அர்ஜுனா, அம்புகளைக் கொண்டு பாலம் கட்டினால் என்னைப் போன்ற குரங்குப் படையின் பாரம் காரணமாக, அந்தப் பாலம் கடலில் மூழ்கிவிடும் என்பதால்தான் ராமபிரான் அம்புகளைக் கொண்டு பாலம் கட்டவில்லை. நீ என்ன என் ராமபிரானைவிடவும் பெரிய வில்லாளியா?'' என்று கேட்டார்.

'வில்லுக்கு விஜயன்' என்று புகழ் பெற்றவன் அல்லவா அர்ஜுனன்? அவன் ஆணவத்துடன், ''ஆஞ்சனேயா! அம்புகளைக் கொண்டு கட்டப்பட்ட பாலம் குரங்குகளின் பாரத்தினால் சமுத்திரத்தில் மூழ்கிவிடுமானால், பிறகு வில்லாளியின் வில்வித்தைக்கு என்னதான் மகிமை இருக்கிறது? நான் இப்போதே நீ பார்த்துக் கொண்டிருக்கும்போதே உன் கண்முன்னால் அம்புகளைக் கொண்டு அற்புதமான பாலம் அமைக்கிறேன். நீ அதன்மீது ஏறி நின்று உன் விருப்பம் போலவே எவ்வளவு வேண்டுமானாலும் ஆடவோ குதிக்கவோ செய். பிறகு நான் உன் ராமனைவிடவும் பெரிய வில்லாளியா இல்லையா என்பதை நீயே தெரிந்துகொள்'' என்றான்.

ஆஞ்சனேயர் புன்முறுவலுடன், ''அம்புகளைக் கொண்டு நீ புதிதாகக் கட்டும் பாலத்தின்மீது நான் ஏறிக் குதிப்பேன். அப்போது அது உடைந்தோ

நொறுங்கியோ போய்விட்டால் நீ என்ன செய்வாய்? என் கால்கட்டைவிரல் பட்டவுடன் நீ அமைக்கும் பாலம் சமுத்திரத்தில் மூழ்கிவிட்டால் நீ என்ன செய்கிறாய், சொல்?'' என்றார்.

அர்ஜுனன், ''ஆஞ்சனேயா! உன் பாரத்தினால் நான் அமைக்கும் அம்புப் பாலம் கடலில் மூழ்கி விடுமானால், இந்த இடத்திலேயே நெருப்பு வளர்த்து அக்கினிப்பிரவேசம் செய்து உயிர்விட்டுவிடுகிறேன். இது சத்தியம்; அம்புப் பாலம் கடலில் மூழ்காமலிருந் தால் நீ என்ன செய்கிறாய் சொல்? உன் பந்தயம் என்ன என்று தெரிவி!'' என்று கேட்டான்.

அர்ஜுனன் செய்த சபதத்தைக் கேட்ட ஆஞ்ச னேயர், ''அர்ஜுனா! உன் அம்புப் பாலத்தை நான் என் கால்கட்டைவிரலால் சமுத்திரத்தில் மூழ்கும்படி செய்வேன். அவ்விதம் நடைபெறாமற்போனால் உன் ரதத்தின் கொடியிலிருந்து உனக்குத் தேவை யான எல்லா உதவிகளையும் செய்கிறேன்'' என்றார்.

''ஆஹா! அப்படியே செய்வோம்'' என்று அனு மனின் பந்தயத்திற்கு அர்ஜுனன் ஒப்புக்கொண் டான்.

'அனுமன் எதிர்பார்ப்பதைவிடவும் பல மடங்கு மிகவும் உறுதியான பாலத்தைக் கட்டிக் காட்டுகி றேன்' என்று நினைத்துக்கொண்டே அர்ஜுனன் தனது புகழ் பெற்ற காண்டீவம் என்ற வில்லில் அம்புகளைத் தொடுத்துப் பிரயோகிக்க ஆரம்பித் தான்; அம்பு மழையாகப் பொழிந்து எழிலார்ந்த பாலத்தைக் கட்டி முடித்தான். பிறகு அவன் பெருமை பூரிக்க, ''ஹும். பாலத்தின் உறுதியை நீ பரிசோதித்துப் பார்த்துக்கொள்'' என்று அனுமனி டம் கூறினான்.

அனுமன், ''ராமா! நான் உன் அடிமை. என்னை நீ எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்'' என்று உள்ளத்தில் பிரார்த்தித்துக் கொண்டார். பிறகு, ''ராம்! ராம்!'' என்று சொல்லிக்கொண்டே, அர்ஜு னன் கடலில் நூறு யோஜனை தூரத்திற்குக் கட்டி யிருந்த அம்புப் பாலத்தின்மீது ஏறாமலே அதன் ஒரு நுனியில் தமது கால்கட்டைவிரலை வைத்து அழுத்தி னார். அவர் அவ்விதம் செய்தாரோ இல்லையோ, மறுவினாடியே அவர் அவ்விதம் செய்ய வேண்டும் என்பதற்காகவே காத்திருந்ததைப் போல, பாலம் பொலபொலவென்று உதிர்ந்து, பாலம் என்ற ஒன்று இருந்ததற்கு அறிகுறியே இல்லாமற் போய்விட்டது. குழந்தைகள் அட்டைகளைக் கொண்டு கட்டிய வீடு காற்றில் சரிந்து விழுவதைப் போலவும், ஆற்று மணலில் குழந்தைகள் கட்டிய வீடு ஒரு விநாடியில் கலைக்கப்படுவதைப் போலவும் அர்ஜுனன் கட்டிய 'அற்புதப் பால'த்தின் நிலை ஆகிவிட்டது.

வீராதிவீரனாகிய அர்ஜுனனுக்கு அவமானத்தி னால் எண்சாண் உடம்பும் கூனிக் குறுகிவிட்டது. அவன் திகைத்து மனம் சோர்ந்தான். அக்கினிப் பிரவேசம் செய்து இறந்து போவதற்காக அவன் வருந்தவில்லை. 'பாசுபத அஸ்திரம் பெறுவதற்காக வந்த நான், வந்த காரியத்தை நிறைவேற்ற வில்லையே! எனக்கு நேர்ந்த முடிவு தெரியாமல், பாண்டவர்களாகிய எனது ஏனைய சகோதரர்கள் என்னைத் தேடுவார்களே!' என்று நினைத்தே அவன் வருந்தினான்.

[எவ்வளவோ பெரிய இலட்சியத்திற்காக நாம் வந்திருக்கிறோம்; அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதை விட்டுவிட்டு. ஆணவத்தினால் நம்மை நாமே சீரழித் துக்கொள்கிறோம். நமது ஆணவம்தான் எத்தனை எத்தனையோ நல்ல காரியங்கள் நடைபெறுவதற்குத் தடையாக இருக்கிறது! இதை உணர்ந்தாலும்கூட நமது ஆணவத்தை விட்டுக் கொடுக்க நாம் தயா ராக இல்லை. அதோடு, மற்றவர்களின் துன்பத்திற் கும் காரணமாகிறோம். பெரிய காரியங்களைச் சாதிக்க வந்த நாம், வெட்கமில்லாமல் அற்ப விஷ யங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். அதற்கு நாம் வெட்கப்பட வேண்டும்—இந்தப் படிப்பினையை அர்ஜுனனின் நிலை உணர்த்துவதாகக் கொள்ள லாம்.]

பாவம்! அர்ஜுனன் என்ன செய்வான்? அவன் வீறாப்புப் பேசியது இருந்த இடம் தெரியாமல் பறந்து போய்விட்டது. தன் சபதத்தின்படி அவன் அக் கினிப்பிரவேசத்திற்காக ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான்.

ஆஞ்சனேயர், அர்ஜுனனை அக்கினிப் பிரவேசம் செய்ய வேண்டாம் என்று சொல்லித் தடுத்தார். என்றாலும் அர்ஜுனன் தன் சபதத்தை நிறைவேற்றக் கட்டைகளை அடுக்கவும் நெருப்பு மூட்டவும் முனைந் தான்.

முடிவில் அவன், தன் ஆருயிர் நண்பனும் குருவு மாகிய கண்ணபிரானை நினைத்து, ''கிருஷ்ணா! என்னைக் கைவிட்டுவிட்டாயா? கடைசியில் என்னை நீ இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டாயே!'' என்று மனமுருகப் பிரார்த்தித்தான். அவன் அக்கினிப் பிரவேசம் செய்யச் சிறிது நேரம்தான் இருந்தது.

அர்ஜுனனின் பிரார்த்தனைக்கு இரங்கிய மாயக் கண்ணன் ஒரு பிரம்மசாரியின் வடிவம் பூண்டு

அங்கே வந்தார். அவர், ''அடாடா! நீ பெருமை வாய்ந்த அர்ஜுனன் அல்லவா? நீ இங்கே என்ன செய்துகொண்டிருக்கிருய்?'' என்று அவனைக் கேட்டார்.

அழமாட்டாத குறையாக அர்ஜுனன் அந்தப் பிரம்மசாரியிடம் நடந்தவை அனைத்தையும் அசடு வழியச் சொல்லி முடித்தான்.

பிரம்மசாரியாகிய கண்ணபிரான், அவன் சொன்னதைக் கேட்டுவிட்டு, ''ஆஹா அர்ஜுனு! மகாவீரனுகிய உன் கதை கடைசியில் இப்படியா ஆகிவிட்டது!'' என்ருர்.

பிறகு பிரம்மசாரி அனுமனையும் அர்ஜுனனையும் பார்த்து, ''நீங்கள் இருவரும் நடத்திய போட்டியில் நியாயம் இல்லை. எப்போதுமே போட்டி என்று வைத்துக் கொண்டால், அதற்குச் சாட்சியாக நடுவர் என்று ஒருவரை வைத்துக்கொள்ள வேண்டும். அதுதான் நேர்மையானது. நடுவர் இருந்து போட்டியின் முடிவு இன்னது என்று தீர்ப்பு வழங்குவதுதான் பொருத்தமானது. நடுவர் இல்லாமல் நீங்களாகவே போட்டியின் முடிவைத் தீர்மானித்திருப்பது சரியல்ல; அதைப் போட்டி என்று கருதவும் முடியாது. நீங்கள் இருவரும் முன்பு போலவே மீண்டும் இப்போது போட்டி நடத்துங்கள். நான் நடுவராக இருந்து போட்டியைக் கவனித்து முடிவு செய்கிறேன்'' என்ருர்.

பிரம்மசாரியின் யோசனைக்கு இருவரும் ஒப்புக் கொண்டார்கள்.

அர்ஜுனன் முதல் காரியமாக, கண்ணனின் துணையை வேண்டி உருக்கத்துடன் பிரார்த்தித்தான். பிறகு முன்பு போலவே வில்லில் கணைகளைப் பொழிந்து பாலம் அமைத்தான். சாட்சாத் ஸ்ரீமந்நாராயணனுகிய பிரம்மசாரி தமது சக்கராயுதத்தைப் பாலத்தின் மத்தியில் இருக்கும்படி செய்தார்.

ஆஞ்சனேயர், ஏற்கனவே ஒருமுறை பாலத்தைக் கடலில் அழுத்திய கர்வத்துடன் முன்பு போலவே காற்பெருவிரலால் பாலத்தை அழுத்தினுர். பாலம் அப்படியே இருந்தது! வியப்புடன் திகைத்த அவர் பாலத்தின்மீது ஏறி இப்படியும் அப்படியும் குதித்தார்; கால்களால் உதைத்தார்; கைகளால் பலம் கொண்ட மட்டும் பிடித்துத் தள்ளினுர்; விசுவரூபம் எடுத்துப் பாலத்தின்மீது மீண்டும் மீண்டும் முழுப் பலத்துடன் குதித்தார். ஆனுல் பாலம் மட்டும் இம்மியும் அசைந்து கொடுக்காமல் உறுதியாகவே இருந்தது.

ஆஞ்சனேயர் தோல்வியை ஒப்புக் கொள்ளும் எண்ணத்தில் கரையில் குதித்தார். அதே சமயம் பிரம்மசாரியின் வடிவம் நீங்கி, ராமனுகக் கண்ணன் காட்சி தந்தார். திரேதாயுகத்தில் ஒரு சமயம் ராமபிரான், ''துவாபரயுகத்தில் கண்ணபிரானுக உனக்குக் காட்சி தருவேன்'' என்று கூறியிருந்தது ஆஞ்சனேயரின் நினைவுக்கு வந்தது. அவர் அவ்விதம் நினைத்த அதே நேரத்தில், ராமபிரான் கண்ணபிரானுக மாறி ஆஞ்சனேயருக்குக் காட்சி தந்தார்.

தம்மை வணங்கி நின்ற ஆஞ்சனேயரைக் கண்ணபிரான் அன்புடன் ஆரத் தழுவிக் கொண்டார். அவர், ''ஆஞ்சனேயா! நானே ராமன்; நானே கண்ணன். ராமன் என்றும் கிருஷ்ணன் என்றும் வெவ்வேறு பெயரில் என்னை வழிபடும் உங்கள் இருவரையும் ஒன்று சேர்க்கவே இந்த விளையாட்டைச் செய்தேன்.

''அர்ஜுனு! ராமனை இகழ்ந்து பேசியும் என்னை மறந்தும் முதலில் பாலம் அமைத்தாய். அனுமனே அந்தப் பாலத்தை என்னிடம் பிரார்த்தித்தபடியே தகர்த்துவிட்டான். இரண்டாம் முறை என்னை நினைத்துப் பாலம் கட்டினுய். ஆகவே இப்போது வெற்றி பெற்ருய்.

''ஆஞ்சனேயா! முதல் முறை என்னை நினைத்துப் போட்டியில் வெற்றி பெற்ற நீ, இரண்டாம் முறை என்னை மறந்தும், முதலில் வெற்றி பெற்றதை நினைத்துக் கர்வம் கொண்டும் பாலத்தைத் தகர்க்க முயன்ருய். உன்னுடைய அந்த மனநிலையே உன் தோல்விக்குக் காரணமாக அமைந்தது'' என்று கூறி மறைந்தார். பாலத்தின் மத்தியில் இருந்த சக்கராயுதம் மீண்டும் தன் இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றது.

இந்த நிகழ்ச்சி துவாபரயுகத்தின் முடிவில் நடந்ததாக ஆனந்த ராமாயணத்தில் இடம் பெற்றுள்ளது.

மகாபாரதப் போரில் அர்ஜுனனின் கொடியில் அனுமன் வீற்றிருந்தார். அது காரணமாக, 'கபித்துவஜன் (அனுமன் கொடியை உடையவன்)' என்ற காரணப் பெயர் அர்ஜுனனுக்கு ஏற்பட்டது.

கர்வம் கூடாது, கடவுளிடம் சரணுகதி செய்ய வேண்டும், வெவ்வேறு பெயரில் ஒரே கடவுள்தாம் இருக்கிருர், உண்மையான பக்தர்களுக்கு எப்போதாவது அபூர்வமாக ஒரு சமயம் கர்வம் தோன்றினுலும் பகவான் அந்தக் கர்வத்தைப் போக்கி அருள் பாலிக்கிருர் என்பவற்றை நாம் மேலே பார்த்த இந்தக் கதை உணர்த்துகிறது. ★

ஸ்ரீராமபிரானின் அருளுரைகள்

உலகமும் செல்வமும்

1

உலகில் சான்றோர்களின் தொடர்பை (சத் சங்கத்தை)க் காண்பது அரிது. எந்த இடத்திலுமே சத்தியம் தெளிவாக விளங்கும் நிலையில் இல்லை. மனம் அவித்தை என்ற அந்தகாரத்தில் மூழ்கி இருள் சூழ்ந்திருக்கிறது. நட்புப் போன்ற பண்பாடு களும் மகிழ்ச்சியும் காணக் கிடைப்பதில்லை. இந்த உலகத்து மண்ணில் ஒழுக்கச் சீர்கேடு என்ற ஒன்றே ஒன்று மட்டும்தான் செழித்து வளரும் நிலை யில் இருக்கிறது.

2

இந்த உலகில் மக்கள் பிறந்து இறந்து போகின் றனர். இறந்து மீண்டும் பிறக்கின்றனர். எல்லாப் பொருள்களுமே அநித்தியமானவை. அவை பாவத்தையும் ஆபத்தையும் விளைவிக்கின்றன. புலன்களுக்கும் பொருள்களுக்கும் பரஸ்பரம் தொடர்பு இருப்பதைப் போன்று தோன்றுவது வெறும் கற்பனைக் காட்சியாகும். உலகம் மனதில் தான் புலனாகிறது. ஆனால் அந்த மனதிற்கே இருப்பு என்பது இல்லை என்று தோன்றுகிறது.

3

துன்பத்தின் காரணங்களை எப்படி அகற்றுவது என்று நினைத்து நினைத்து அதற்கான வழிமுறை களைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்து நான் மனம் நொந்திருக்கிறேன். இந்த உலகில் நிலவும் துன்பங் களை நினைத்து நினைத்து என் இதயமே இருண்டு பாழடைந்துவிட்டது. அது உற்சாகத்தை இழந்து சோபையற்று மயானம் போன்று ஆகிவிட்டது. உலகின் நிலையாமையையும் மற்றுமுள்ள பலவேறு தோஷங்களையும் நினைத்து நினைத்து நான் அமைதி காணாமல் தவிக்கிறேன்; சங்கிலியால் கட்டப்பட்ட காட்டு யானை போன்று நிம்மதியின்றித் திண்டாடு கிறேன்.

4

பரம்பொருளை நாடும் சாதகன் அற்பத்தனமான இந்திரிய போகங்கள் நிறைந்த இந்த லௌகிகம் என்ற குகைப் பகுதியில் திருப்தியுடன் வாழ முடியுமா? இந்த உலகில் சுகம் கிடைக்கிறது என்று நினைத்துக் கொள்பவர்களைக் காலம் விழுங்கிவிடு கிறது.

5

நம் முன் தென்படும் இந்த உலகம் கனவுபோன்று வேகமாக மறைந்து போகக் கூடியது. இன்று வானமளாவி நிற்கும் மலை வரிசைகள் கொஞ்ச காலத்திற்குள்ளாகவே மட்ட நிலப்பரப்பாகக் குன்றி விடலாம்.

6

இந்த உலகில் இருக்கும் எல்லாமே மாறுதலுக்கு உட்பட்டே ஆகவேண்டும். உடல் எடுத்துள்ள ஜீவர்கள் விஷயத்தில் குழந்தைப் பருவம் மாறி வாலிபப் பருவமும், வாலிபப் பருவம் மாறி வயோ திகப் பருவமும் வரத்தான் வரும். ஓர் அலை போக வும மற்றோர் அலை வருவதைப் போல, ஒரு நிலை கழிந்து மற்றொரு நிலை வருவதே இயல்பு. ஒவ் வொரு பொருளும் இந்த விதிக்கு உட்பட்டதே ஆகும்.

7

ஒவ்வொரு நாளும் பொருள்கள் நாசமடைவதை யும், அதே சமயம் புதிய பொருள்கள் தோன்று வதையும் பார்த்தபடி இருக்கிறோம். ஆனால் இந்த உலகம் ஒரேயடியாக முழு அளவில் தீர்ந்து போவதை நாம் பார்ப்பதில்லை. மனித ஜீவன்கள் மிருகங்களாக மறுபிறவி எடுக்கலாம். மிருக இனம் மனிதர்களாக மறுபிறவி எடுக்கலாம். தேவர்கள் தேவப் பிறவி என்ற நிலையிலிருந்து கீழே இறக்கப்படலாம். ஆகவே இந்த உலகில் நிலைத் திருக்கும் நிலை என்பது உண்டா, என்ன?

8

மின்னல் ஒரு கணமே பளிச்சென்று வீசிப் பிரகாசித்து மறைந்து போகிறது. அது போலவே தான், இயற்கையிலுள்ள அழகு ததும்பும் பொருள் களும் க்ஷண நேரம் இருந்துவிட்டு மறையக் கூடியனவாக இருக்கின்றன. எல்லா உயிர்களுமே அழிவை நோக்கித்தான் சென்று கொண்டிருக் கின்றன. மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகியோரும்கூட இதற்கு விலக்காக இல்லை. பாலைவனத்தில் பாயும் தண்ணீர் உறிஞ்சப்

பட்டு வற்றி மறைவதைப் போலவே, எல்லாப் பொருள்களும் அழிந்து போகின்றன.

9

உடைமைகளும் போகப் பொருள்களும், கவலைக்கும் துன்பத்திற்கும் இடம் தரக்கூடிய மூல காரணங்களாக அமைந்திருக்கின்றன. எந்த சிந்தனையுமின்றி ஏகாந்தவாசம் செய்து உள்ளத்தில் சமநிலையை ஏற்படுத்தி வாழ்வது எவ்வளவோ மேலானது.

10

புலனின்பங்கள் இருக்கின்றனவே, அவை தாம் உண்மையான விஷமாகும். விஷம் என்று மக்கள் பொதுவாகக் குறிப்பிடும் நஞ்சு அவ்வளவு கொடியது அல்ல. ஏனென்றால், மக்கள் குறிப்பிடும் அந்த விஷம், உயிரைப் போக்கி ஒரு பிறவியைச் சேர்ந்த உடலைத்தான் அழிக்கிறது. ஆனால், புலனின்பமாகிய விஷமோ ஒரு பிறவியிலிருந்து மற்றொரு பிறவிக்கு என்று எண்ணற்ற பிறவி தோறும் தொடர்ந்து வந்து மனிதனுக்குக் கேடு விளைவிக்கிறது.

11

உலகம் நிலையற்றது. இதில் அணு அளவுக்குக் கூடச் சுகம் காண முடியாது. நான் இறந்துபோகவும் விரும்பவில்லை, வாழ்ந்துகொண்டிருக்கவும் விரும்பவில்லை. அரசு, செல்வம், போகம், ஆசைகள் ஆகியவற்றுள் எதிலுமே எனக்கு ஆவல் இல்லை. ஏனென்றால், இவற்றுக்கெல்லாம் காரணமாக இருக்கும் அகங்கார உணர்ச்சியை நான் என்னிடமிருந்து தவிர்த்துக்கொண்டுவிட்டேன்.

12


இந்த உலகம் புறத்தளவில் பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், அதனுடைய உண்மையான சொரூபம் உண்மையிலேயே பெரிதும் அருவருக்கத் தக்கது. இந்த உலகில் எல்லா விஷயங்களும் துன்பத்தில் முடிவு பெறுகின்றவையே ஆகும். உலகில் உள்ள எதுவும் மனதுக்கு உண்மையான அமைதியைத் தராது.

13

மழை பெய்து வெள்ளம் பெருகும்போது நதியில் நீர்ச் சுழல்கள் தோன்றுகின்றன. அது போலவே, தங்களிடம் பணம் பெருகும்போது மூடர்கள் கர்வம் அகங்காரம் ஆகிய சுழிகளில் சிக்கிக் கொள்கிறார்கள்.

14

ஆற்றில் அலைகள் தோன்றுகின்றன. அது போல எண்ணற்ற துன்பங்கள் செல்வம் காரணமாக விளைகின்றன. ஆகவே மனிதன் அலையைப் போலச் சஞ்சலத்தில் தத்தளிக்கிறான்; தீய செயல்களும் செய்து கெடுகிறான்.



15

சாம்பல் படிந்த நிலையில் ரத்தினக்கல்லும் பிரகாசம் இழந்து தோன்றுகிறது. செல்வம் குவிந்து விட்டால் பண்டிதர்களும் வீரர்களும் பணிவும் நன்றியுணர்வும் நிறைந்த நல்லோர்களும்கூடத் தம்தம் இயல்பையே இழந்து கெட்டுவிடுகிறார்கள்.

16

விஷச் செடி மக்கள் இறந்து போவதற்குக் காரணமாக அமைகிறது. அது போல, இலௌகிகச் செல்வம் மகிழ்ச்சியைத் தருவதற்குப் பதிலாகத் துன்பத்திற்கே காரணமாக அமைகிறது. தன்னிடம் இருக்கும் செல்வத்தைப் பாதுகாத்து வைப்பதில் மட்டுமே தன்னுடைய எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்துபவன் ஆத்மநாசம் அடைவான்.

17

'பணம்தான் அடைய வேண்டிய மிகப் பெரிய பாக்கியம்; அதுதான் மகிழ்ச்சியைப் பெறுவதற்கு உரிய ஒரே வழி' என்று மூடன் கருதுகிறான். ஆனால் உண்மை என்னவென்றால், செல்வம் அஞ்ஞானத்தையும் துன்பத்தையும் எல்லாவிதமான கேடுகளையுமே கொண்டு வந்து சேர்க்கும்.

18

மாணிக்கத்தின் பிரகாசத்தைக்கூட அதன்மீது படியும் மாசு மங்கிவிடச் செய்கிறது. அது போல, அறிஞர்களின் நல்ல இயல்புகளையும் செல்வம் கறைப்படுத்திவிடுகிறது.

19

வானவில்லின் வர்ண ஜாலங்கள் நிலைத்திருக்க மாட்டா. அவை போலத்தான், தோன்றி மறையும் வர்ணஜாலங்களைக் கொண்டு, செல்வம் என்ற திருமகள் மக்களின் உள்ளத்தை மோகிக்கச் செய்கிறாள். மின்னல் மின்னி மறைவதைப் போலவே சிறிது காலத்திற்குத் திருமகள் பளிச்சென்று பிரகாசித்துவிட்டு மறைந்துவிடுகிறாள். [தொடரும்]

தியான வேளையிலே....

எப்.ஜே.அலெக்சாண்டர்

தியான காலங்களில் ஆத்மா மேலும் தனக்குத் தானே சொல்லிக்கொள்வதாவது :—

சோதனைச் சமயம் வருகிறது, மனிதனிடம் பல வீனமோ மிகவும் அதிகமாக இருக்கிறது—இதெல் லாம் உண்மைதான். இருந்தபோதிலும் பாவத்திற் குக் காரணமாக இருப்பது பலவீனம்தான் என்ற அறிவே நாளடைவில் அந்தப் பலவீனத்தை அழித்துவிடும். ஏனென்ருல் ஒருதடவை நீ விஷ யத்தைத் தெரிந்து கொண்டுவிட்டாயானுல் இயல் பாகவே நீ அதை வெறுத்துத் தள்ளிவிடுவாய். நீ உன் பலவீனத்தை அறிந்து கொண்டுவிட்டபின் மேலும் அது பலவீனமாக இருக்காது. உன் தொல்லேயின் உட்கருத்தை நீ மனம்விட்டுக் கூறி விட்டாய். ஆழ்கடலின் ஆழம் எப்படி அதன் உள் நீரோட்டங்களின் கதியை மாற்றிவிடுமோ, அது போல உன் உள்ளத்தின் ஆழத்தில் உறையும் ஒரு வஸ்து உன் தொல்லேயின் போக்குகளே மாற்றி விடும். காலக்கிரமத்தில் நீ வெற்றி அடைவாய்—உன் இதயம் மட்டும் கபடமற்றிருக்கும் பட்சத்தில். இடைவிடாமல் உறுதியுடன் பிரார்த்தனே செய்து வா. ஏனென்ருல், ஆன்மிகப் போராட்டத்தில் ஆத்மாவின் நிரந்தரமான விழிப்புடன் கூடிய கண் காணிப்பு அவசியம். அவ்வப்போது சமயங்கள் வரும்; அந்தச் சமயங்களில் உன் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்துகொள்ளும் நுண்ணறிவு உனக்கு ஏற்படும்; அப்போது நீ பலவீனத்தைப் பலவீனமாகத் தெரிந்துகொள்வாய். அந்தத் தரு ணத்தில் பரம்பொருளேக் கூவியழை. அவர் உன் பிரார்த்தனேகளுக்குச் செவிசாய்த்துத் திருவருள் பாலிப்பார்.

தத்துவம் அல்லது கோட்பாடு என்பது ஒன்று, வாழ்க்கை என்பது வேறு. உண்மைப்பொருளின் தத்துவத்தைப் பற்றி நீ எவ்வளவுதான் அழகாக, ஆச்சரியப்படத்தக்க விதமாகப் புத்தியினுல் கிரகித் திருந்தபோதிலும்கூட—மனிதனே மனிதனுக்குவது தான், ஸ்வாநுபவம் பெறுவதுதான் லட்சியம் என் பதை உணர்ந்துகொள். சுவானுபூதிதான் முக்கியம்; அதுதான் சக்தி வாய்ந்தது. உன்னிடமுள்ள மிரு கத்தன்மை வலிவுள்ளதுதான். இருந்தபோதிலும், சிரத்தையோடு கூடிய மனம் நிறைந்த பிரார்த்தனே யால் அதை அடக்கிவிடலாம். பிரார்த்தனே ஒன்று தான் தேவை; அதுதான் வழி. பிரார்த்தனேயினுலே தான் சிற்றின்ப இச்சையை வெற்றிகொள்ள முடி யும். இறைவனின் திருநாமத்தைவிட உயர்ந்தது வேறு ஒன்றுமில்லே. ஆத்மாவின் நிரந்தரமான விழிப்புடன் கூடிய கண்காணிப்பும், இடைவிடாத பிரார்த்தனேயும் உன் பிரதிக்கினேயாக, குறிக்கோ ளாக இருக்கட்டும். அவ்விதம் நீ இருந்தால் கை கொடுத்துத் தூக்கிவிட்டு உதவி செய்பவர் யாரோ, பரம்பொருளின் தெய்விகத் தூதர் யாரோ அவர்கள் உன்னிடம் வருவார்கள். நீ எல்லாவிதப் பந்தங் களிலிருந்தும் விடுபட்டுச் சுதந்திரம் அடைவாய்! உண்மையில், வழியோ மிகவும் நீண்டது. ஆனுல், முடிவை அடையப்போவது நிச்சயம்.

பிரார்த்தனே மிகவும் ஆழத்திற்குச் செல்கிறது. ஆசாபாச மயக்குகளின் உயிர்நிலேகளேயெல்லாம் அது விழுங்கிவிடுகிறது. பிரார்த்தனே, பிரார்த்தனே, இடைவிடாது பிரார்த்தனே செய். எப்போதும் பிரார்த்தனே செய். சோதனேக் காலம்—அதாவது கெட்ட நேரம்—வரும்போது உறுதியை இழந்து விடாதே. விழ்ச்சியடைந்தாலும் அதைரியப்படா மலிரு. கடவுள் எப்போதும் அருகிலேயே இருக்கி ருர். உன் துன்பத்தையும் நேர்மையான உள்ளத்தை யும் அவர் அறிவார். ஆனுலும் அவரைக் கூவிய ழைப்பதை ஒருபோதும் நிறுத்திவிடாதே! உன் பாவச் செய்கையிலும்கூட, பிரார்த்தனேயில் வலிமை கொண்டவனுக இரு. பிரார்த்தனேயின் ஆழத்தி லிருந்து—கடவுளிடம் பக்தி, ஆன்மிக திருஷ்டி, ஆத்ம சாட்சாத்காரம் ஆகிய எல்லாம் வெளி வருகின்றன. கடவுள் சர்வசக்தி வாய்ந்தவர்; ஆடு களே, முக்கியமாக வழிவிலகிச் செல்லும் ஆடுகளே,

நல்ல ஆட்டிடையன் நேர்வழிப்படுத்திச் செல்வது போல் அவரது இயல்பு இருக்கிறது என்ற எண்ணங்களில் ஊன்றி நில். நியாயம் வழங்குபவராக இருப்பதற்கும் முன்பு, கடவுள் அன்புமயமாக, அன்பே உருவெடுத்தவராக இருக்கிறார் என்பதைத் தெரிந்துகொள். நீ கேட்க வேண்டியதுதான், அது உனக்கு உடனே கிடைத்துவிடும்; தேடினால் போதும், கண்டுவிடுவாய்; நீ கதவைத் தட்ட வேண்டியது ஒன்றுதான், அது உனக்கு உடனே திறந்து விடப்படும். மிக மிகக் குறைந்த அளவு முயற்சிசெய், போதும்; அதுவும்கூடக் கடவுளின் நியாய ராஜ்யத்திற்கு உன்னை உயர்த்திவிடும்.

ஆம், நீ செய்யும் ஒவ்வொரு பிரார்த்தனையும், கடவுளை நோக்கி உயரும் உன் ஒவ்வோர் இதய நெகிழ்ச்சியும் உன் கணக்கில் வைக்கப்படும். அவை உனக்குப் பக்கபலமாக நின்று, உன் வலிமையை வளர்க்கும். உன் பிரார்த்தனைகள் உன்னை முழுமனிதனாகச் செய்துவிடும்.

பிரார்த்தனையைச் சார்ந்திரு! அதுதான் வழி. உன் இதயம் எவ்வளவுதான் இருளடைந்திருந்தபோதிலும், பிரார்த்தனை அந்த இருளை ஓட்டி அங்கு ஒளியைக் கொண்டு வரும். ஏனென்றால், பிரார்த்தனைதான் தியானம்; பிரார்த்தனையே உள்ளுணர்வின் ஞானதிருஷ்டி. பரம்பொருளிடம் தொடர்பு கொள்ளுவதற்குத்தான், அவருடன் இணங்கியிருப்பதற்குத்தான் பிரார்த்தனை என்று பெயர். அது சர்வசக்தியோடும் மேன்மையான உரைகடந்த அன்புடனும் விளங்கும் பரம்பொருளுடன் உன்னை இணைக்கிறது. அது உன் ஆத்மாவுக்குச் சிறகுகளை அளித்து உயரப் பறக்கும்படி செய்கிறது. சேற்றில் கிடந்து நீ உழன்றாலும் அதை உதறிவிட்டு வெளிக்கிளம்புவாய். மலைமலையாகப் பாவக் குவியல்கள் உன்மேல் விழுந்திருந்த போதிலும், அவை உன் ஆத்மிகத்தின் சுவடே தெரியாமல் அதை அழித்துப் புதைந்திருந்தபோதிலும், பிரார்த்தனை உன்னை மேலே தூக்கிவிடும். உள்ளே, உள்ளே, உள்ளே இதயத்தின் ஆழத்தில் ஆழ்ந்திருக்கும் பகவான் உன் பிரார்த்தனையைக் கேட்பார். அவருடைய அன்பும் சக்தியும் பிரத்தியட்சமாக நீ புரிந்துகொள்ளும் வகையில் உனக்குப் புலப்படும்; அவரது திருவருள் உனக்கு நிதர்சனமாகக் காண்பிக்கப்படும். அந்தப் பரம்பொருளின் வாக்கு உண்மைதான் என்று நிரூபித்துக் காட்டுவதைப் போல உன்னை மேலே தூக்கி விடும். உன்னைத் தடுத்தாட்கொண்ட பரம்பொருளின் புகழை நீ அப்போது போற்றிப் புகழ்ந்து பாடுவாய். கடவுளுடைய அபார அருளின் மேன்மைக்கு உன் இதயமே சாட்சி சொல்லும். உன்னை அறிந்தவர்களெல்லாம், "அட! அவன் ஒரு மகாத்மாவாக ஆகிவிட்டான்!" என்று சொல்வர். உண்மையில் கடவுளின் திருவருள்தான் அவர் வழங்கும் நியாயமாகும். அவருடைய திருவருள்தான் என்றென்றும் நிலைத்திருக்கிறது; என்றென்றைக்குமாக அழிவில்லாமல் நிலைத்திருக்கிறது. ஆகவே, பிரார்த்தனையை உறுதியாகப் பிடித்துக் கொள்! காமக்குரோதங்களும் எண்ணற்ற ஆசைமயக்குகளும் பகைமை பூண்டு உன்னை எவ்வளவுதான் கடுமையாகத் தாக்கினாலும், உன் இயல்பைச் சுற்றிப் பிரார்த்தனையினால் ஒரு கோட்டையை எழுப்பிக்கொள். பிரார்த்தனையாகிய அந்தக் கோட்டை தகர்க்கவே முடியாத பலம் பொருந்தியதாக ஆகும். ஆம், நரகத்தின் வாயிற்கதவுகள்கூட அந்தக் கோட்டையை அணுகவும் முடியாது; உறுதியில் அதை மிஞ்சவும் முடியாது! ஏனென்றால், அன்பு என்ற உறுதியான கயிறுகளாலும், பிரார்த்தனையால் வரும் ஆத்மசாட்சாத்காரத்தாலும் கடவுள் உன்னைத் தம்முடன் சேர்த்துப் பிணைத்துக் கொண்டு விடுவார்!

ஹரி: ஓம். தத் ஸத்!

உங்களுக்குப் பல நண்பர்கள் இருக்கலாம். அவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் உள்ள வரையில் அவர்களுடைய நல்லது பொல்லாததெல்லாம் நம்மைத் தொடுகின்றன. ஒரு காலத்தில் அவர்களே நமக்கு விரோதிகளாகிவிடுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது அவர்களுடைய சுகதுக்கத்துக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லாமல் போகிறது. அவர்களைப்பற்றிக் கவலைப்படுவதையும் அவர்களது சந்தோஷத்தில் பங்கு பெறுவதையும் விட்டொழிக்கிறோம். இப்படி நம் உணர்ச்சியில் மாறுபாடு உண்டாவதற்குக் காரணம் என்ன? அவர்கள் நம்முடையவர்கள் என்ற அபிமானம் போனதுதான். இதுபோலவே உடம்பிலிருந்தும் நம்முடையது என்ற அபிமானத்தை நீக்கவேண்டும். அதன்பின் சம்சார வியாதி தானே தீர்ந்துபோகும்.

— ஸ்ரீசங்கரர்

புதிய புத்தகங்கள்

பாரதியாரின் வேதரிஷிகளின் கவிதை

[ஆசிரியர்: டாக்டர் பெ. சு. மணி; வெளியிட்டோர்: பூங்கொடி பதிப்பகம், 22, வடகூர் செல்வ விநாயகர் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004; பக்கம் : 224; விலை ரூ. 8-50]

''இந்துக்கள் தங்களுடைய கடந்த கால வரலாற்றை ஆழ்ந்து படிக்கும் அளவிற்கேற்ப, அவர்களின் எதிர்காலம் மேலும் மேலும் பெருமைக்கு உரியதாக அமையும்'' என்று யுக நாயகராகிய சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டார். இந்தியாவின் கடந்த காலப் பெருமையை நினைவு படுத்தும் வகையில் திரு பெ. சு. மணி அவர்கள் தமது பங்காக இந்த நூலைத் தமிழ்மக்களுக்கு வழங்கியுள்ளார். நூலில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ள அடிக்குறிப்புக்களால் ஆசிரியரின் உழைப்பை நாம் உணர்ந்தறிய முடிகிறது.

ஆன்மிகக் கருத்துக்கள் சமுதாயத்தின் பல கட்டங்களிலும் எப்படியெல்லாம் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதனை, பண்டைய தமிழ் நூல்களில் வேதம் பற்றிய குறிப்புக்களுடன் தொடங்கி, வரலாற்று ரீதியில் இன்று வரையிலான சிறிய சிறிய தகவல்களையும் கோவைப்படுத்தி, 'வேதநெறி வரலாறு' என்னும் அத்தியாயத்தை ஆசிரியர் படைத்துள்ளார். தொன்மை வாய்ந்த வேதநெறியின் நீண்ட நெடும் பயணத்தைச் சுருக்கமாகக் கூறும் இந்த அத்தியாயம், பாரதியின் வேதநெறி பற்றிய கருத்துக்களுக்கு நல்லதொரு பின்னணியை அமைத்துத் தந்திருக்கிறது.

வேதத்தில் இடம் பெற்றுள்ள சில ஸூக்தங்களைப் பாரதியார் மொழிபெயர்த்திருக்கிறார். அவற்றுக்கு அவரே முன்னுரையும் விளக்கங்களும் எழுதியுள்ளார். அவற்றுடன் கவியரசர் மொழிபெயர்த்த ஈசோபநிஷதம், கேனோபநிஷதம் ஆகியவையும் இந்த நூலில் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. எனவே, பாரதியின் வேதரிஷிகளின் கவிதை தற்சமயம் நூல்வடிவில் இல்லை என்ற குறையை இந்நூல் நீக்கியுள்ளது.

பாரதியின் உரைநடை, கவிதை, பலரும் அறிந்திராத உபநிஷத மொழிபெயர்ப்புகளிலிருந்து வேதநெறி பற்றிய கருத்துக்களை ஒருங்கே தொகுத்து அளித்திருப்பது வேதநெறி பற்றிய கவியின் உள்ளத்தை நம் மனதில் ஆழ்ந்து பதியச் செய்கிறது.

ஒவ்வொருவரும், குறிப்பாக இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவரும் வேதநெறிபற்றி அறிந்திருக்க வேண்டும். ஆலய தீபஸ்தம்பம் போன்ற வேதாந்த உண்மைகள் மக்களிடையே பரவுவது ஆண்மை, வலிமை, அச்சமின்மை, தன்னம்பிக்கை போன்ற சீரிய பண்பாட்டைச் சமுதாயத்தில் தோற்றுவிக்கும். இத்தகைய பண்பாடுகளின் ஓர் ஒட்டுமொத்தமான உருவமாக உண்மை இந்துவாகிய மகாகவி பாரதி திகழ்ந்தார்.

தேசபக்தராகவும் தமிழ்ப்பற்றுக் கொண்டவராகவும் பாரதியைக் கண்டு பழகிய அன்பர்களுக்கு அவரை 'வேதநெறி பாரதி'யாகக் காண்பது சற்றுப் புதுமையாகக்கூட இருக்கும். பாரதியிடம் இரண்டறக் கலந்திருந்த அந்தப் பண்பு இத்தகைய கண்ணோட்டத்துடன் நூல்வடிவில் எடுத்துக் காட்டப்படுவது இதுவே முதல் தடவை ஆகும்.

இந்து ஒருவனுக்கு என்றென்றைக்குமே இலட்சியமாக விளங்கும் புகழுக்கு உரிய வேதநெறியில் இளமை முதலே பாரதியார் ஆர்வம் கொண்டிருந்தார். ஏற்கனவே எரிந்துகொண்டிருந்த அந்த ஆர்வம் என்ற விளக்கிற்குத் தூண்டுகோலாக அரவிந்தரின் தொடர்பு அமைந்தது.

ஓர் உண்மைக் கவிஞன் தனது காலத்தில் வாழும் மக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடியாகத்தான் விளங்க முடியும். போர்க்களக் கவிஞராகத் திகழ்ந்ததனாலும், தாம் சமயப் பணிக்காக நிறுவ முயன்ற ஆன்மிக வளர்ச்சிக் கழகம் மலராமல் அரும்பு நிலையிலேயே கருகி விட்டதனாலும் வேதநெறி பற்றிய கருத்துக்களை ஏராளமாகப் படைக்கப் பாரதிக்கு வாய்ப்புக்கள் இல்லாமற் போயின எனலாம். ஆனால் இந்து

ஒருவனுக்கு ஊற்றுக்கண்ணுக வேதநெறிதான் திகழ முடியும் என்பதைப் பாரதியின் எழுத்துக்கள் புலப்படுத்தத் தவறவேயில்லை.

சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் தார்மிகம் அடிப்படையாக இருந்து இயங்க வேண்டும். இதைப் பின்பற்றினுலே உலகில் சத்திய யுகம் தோன்றிவிடும். தார்மிக வாழ்க்கை நமது வாழ்க்கையில் அமைவதில் நாம் கண்ணும் கருத்துமாக இருப்போமாக. இதுவே வேதநெறியின் நுழைவாயில்; முடிவிடம் ஜீவப்பிரம்ம ஐக்கியம் என்னும் ஆத்ம சாட்சாத்காரமே ஆகும்.

பல பிரிவுகளும் சம்பிரதாயங்களும் உள்ள இந்து மதத்தை வேதங்களை ஆதாரமாகக் கொண்டே சமயாசார்யர்கள் ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்தனர். 'வேதநெறி அந்தக் காலத்திற்குப் பொருந்துவதாக இருந்திருக்கலாம்; தற்காலத்திற்கு எப்படிப் பொருந்தும்?' என்று கேட்கலாம். அத்தகையவர்கள் வேதநெறி தற்காலத்திற்கும் சரி, இனி வர இருக்கும் சமுதாயத்திற்கும் சரி, எப்படிப் பொருந்தும் என்பதை விவேகானந்தரின் வாழ்வு — வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

தனியுரிமையும் ஆதிக்க மனப்பான்மையும் அற்ற வேதநெறி என்பது சமுதாயத்திற்கும் தனி மனிதனின் வளர்ச்சிக்கும் ஒருபோதும் எந்த விதத்திலும் முட்டுக்கட்டை அல்ல. சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை அன்பர் திரு பெ. சு. மணி அவர்கள் பல இடங்களிலும் எடுத்துக் காட்டியுள்ளார். இந்த நூலில் இடம் பெற்றுள்ள விவேகானந்தரின் கருத்துக்களையும் பாரதியாரின் கருத்துக்களையும் அன்பர்கள் மேலும் மேலும் ஆராய்வது, வேதநெறி உண்மையான முற்போக்குக் கொள்கை, எதற்குமே முரண்பட்டதல்ல என்பதனை உணரப் பெரிதும் துணைபுரியும்.

—சுவாமி கமலாத்மானந்தர்

ஸ்ரீமத் பகவத்கீதை — பொருட்பா

[ஆசிரியர் : அருட்கவிமணி காமாட்சிதாசர், 34, அருண்டேல் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004. விலை : ரூ. 5-00]

1952-இல் முதன்முதல் வெளியான இந்நூல் மூன்ரும் பதிப்பாக இப்போது Sacred Works Publications குழுவினரால் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மத சம்பந்தமான நூல்களை, முக்கியமாக பகவத்கீதை மொழிபெயர்ப்புகளை மத ஸ்தாபனங்களுக்கும் மாணவர்களுக்கும் இலவசமாக இந்தக் குழுவினர் வழங்கி வருகிருர்கள்.

பகவத்கீதையிலுள்ள ஒவ்வொரு சுலோகத்திற்கும் ஒவ்வொரு பாட்டு வடிவில் எளிய நடையில் கருத்து மாறுபடாமல் மிளிரும் இந்த நூல் சமீப காலத்தில் தமிழ்ப்பா வடிவில் வெளி வந்துள்ள கீதைப் பிரசுரங்களில் முதல் ஸ்தானத்தைப் பெற்றுள்ளது.

— 'அண்ணு'

விஜயபாரதம் — விஜயதசமி மலர்

[விஜயபாரதம் (தேசிய வார ஏடு), 86, படேல் ரோடு, பெரம்பூர், சென்னை - 600 011. விலை : ரூ. 4-00]

தியாகபூமி என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகை, தற்போது விஜயபாரதம் என்ற பெயர் மாற்றத்துடன் வெளியிடப்படுகிறது. விஜய பாரதத்தின் விஜயதசமி மலர் தெய்வபக்தி, தேச பக்தி கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. ஆர். எஸ். எஸ். இயக்கத்தைப் பற்றியும் அதன் பணிகளைப் பற்றியும் பல கோணங்களில் ஆராயப்பட்ட கட்டுரைகள் இந்த மலரின் அம்சமாகத் திகழ்கின்றன.

— சத்தியகாமன்

கடவுள் — தீபாவளி மலர்

[ஆசிரியர் : வி. ராமஸ்வாமி, வெளியிட்டோர் : கடவுள் காரியாலயம், 40, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை - 600 005; விலை : ரூ. 2-00]

இந்த இதழின் அட்டைப்படமாக காஞ்சி ஸ்ரீ அத்திவரதர் இடம் பெற்றுள்ளார். ஜயேந்திர விஜயம், ஆதி சங்கரரும் அமரகவியும், காஞ்சி ஆசாரியரும் காந்தி அடிகளும், சூட்சும சரீரம், தீபாவளி தத்துவம், சிவனே குரு, ஆயகலைகள் அறுபத்து நான்கு, சேக்கிழார், கேதரர கௌரி விரதம், தாயுமானுர் காட்டும் அருள் நெறி போன்ற தலைப்புகளில் பல கட்டுரைகளும் சில கவிதைகளும் இம்மலரை அலங்கரிக்கின்றன.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

'எழுமின், விழிமின், குறிசாரும் வரை நில்லாது செல்மின் !'

தொகுதி 59

காளயுக்தி ௵ தை முதல் சித்தார்த்தி மார்கழி முடிய

1979

ஆசிரியர் : சுவாமி தன்மயானந்தர்

துணை ஆசிரியர் : சுவாமி கமலாத்மானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
16, ராமகிருஷ்ண மடம் ரோடு
மயிலாப்பூர்
சென்னை - 600 004

பொருளடக்கம்

(அகர வரிசை)

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் — 1979



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி
திருமலையைத் தரிசிக்க வாரீர்

உலகத்திலேயே மிகவும் பவித்திரமான க்ஷேத்திரமாகத் திருமலை விளங்குகிறது. இங்கு தான் பூவுலக மக்களின் முக்தியின் பொருட்டு ஸ்ரீமகாவிஷ்ணு, ஸ்ரீவேங்கடேசுவரராக எழுந்தருளியுள்ளார். இந்தப் புண்ணியஸ்தலம் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள சித்தூர் மாவட்டத்தில் அமைந்திருக்கிறது. மகான்களாலும் ரிஷிகளாலும் புனிதப்படுத்தப்பட்ட இந்த க்ஷேத்திரம் 3,000 அடி உயரத்தில் இருக்கிறது. ஆண்டு முழுவதும் உடலுக்கும் மனதுக்கும் ஏற்ற இதமான சீதோஷ்ண நிலையைக் கொண்டிருப்பது இந்த க்ஷேத்திரத்தின் மற்றொரு சிறப்பு அம்சமாகத் திகழ்கிறது.

இந்தியாவின் முக்கியமான பகுதிகள் எல்லாவற்றிலிருந்தும் திருமலை அடிவாரம் வரை வருவதற்கு ரெயில் வசதி இருக்கிறது. இது தவிர சென்னை, பெங்களூர், ஹைதராபாத் ஆகிய நகரங்களிலிருந்தும் நேரடி பஸ் போக்குவரத்து இருக்கிறது.

அதிகாலையிலிருந்து நடுஇரவு வரையிலும் ஏராளமான பஸ்கள் திருமலை அடிவாரத்திலிருந்து மலைக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் செல்கின்றன. பக்தர்கள் காலை 6 மணியிலிருந்து இரவு 12 மணி வரையிலும் ஸ்ரீவேங்கடேசப் பெருமாளைத் தரிசனம் செய்யலாம்.

திருமலையிலும் திருப்பதியிலும், பக்தர்கள் இலவசமாகவோ செலவு செய்தோ தங்குவதற்கேற்ற வசதியான விடுதிகள் இருக்கின்றன.

மேலும் திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, ஸ்ரீகபிலேசுவர ஸ்வாமி, ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆகிய ஆலயங்களையும், திருச்சானூரில் ஸ்ரீவேங்கடேசுவரரின் தேவியாரான ஸ்ரீபத்மாவதி தாயாரின் ஆலயத்தையும் பக்தர்கள் தரிசிக்கலாம். இது தவிர, மங்காபுரத்தில் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள், நாராயணவனத்தில் ஸ்ரீகல்யாணவேங்கடேசுவரர், நாகலாபுரத்தில் ஸ்ரீவடநாராயண ஸ்வாமி ஆலயங்களும் பக்தர்கள் அவசியம் தரிசிக்க வேண்டிய புண்ணிய ஸ்தலங்களாகும்.

உண்டியலில் நீங்கள் பகவானுக்குச் சேர்ப்பிக்கும் காணிக்கைகள், தெய்வத் திருப்பணிக்கும் கல்வி சமூகநலத் தொண்டு முதலிய அரிய பணிகளுக்கும் செலவிடப்படுகின்றன.

மேற்கொண்டு மற்ற விவரங்களுக்குப் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளக் கோருகிறோம்.

எக்ஸிக்யூடிவ் ஆபீசர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி
சித்தூர் மாவட்டம், ஆந்திர பிரதேசம்

காந்தியடிகளின் பொன்மொழிகள்



பொன்மொழிகள்

★ 'ஏசுவின் உபதேசத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்' என்று தங்களைச் சொல்லிக்கொண்டு, அவரைச் சமாதானத்தின் மன்னர் என்று வர்ணிப்பவர்கள், பிரத்தியட்ச நடைமுறை வாழ்க்கையில் அந்த நம்பிக்கையில் ஓரளவைக்கூடக் காண்பிக்காமல் இருப்பதுதான் முதல் தரமான சோக நாடகம்.

★ ''உலகத்தில் நான் யாருக்கும் பயப்பட மாட்டேன். கடவுளுக்குத் தான் பயப்படுவேன். யார் மீதும் நான் கெட்ட எண்ணம் கொள்ள மாட்டேன். யாருடைய அநீதிக்கும் நான் பணியமாட்டேன். நான் உண்மையினுல் பொய்யை வெல்லுவேன். பொய்யை எதிர்த்துப் போராடுவதில் நான் சகல துன்பங்களையும் எதிர்த்துப் போராடுவேன்.''

தினந்தோறும் காலையில் முதல் காரியமாக மேற்கண்ட தீர்மானத்தைச் செய்து கொள்வோமாக.

★ 'கடவுள் ஒருவரே' என்று நான் நம்புகிறேன். அதனுல் மனிதசமூகம் முழுவதுமே ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன்.

அசோகா பாக்குத்தூள் கம்பெனி பிரைவேட் லிமிடெட்

'' அசோகா பாக்டரி ''

தபால் பெட்டி நெ. 3702

11/234, டாக்டர் நஞ்ஜப்பா ரோடு

கோயமுத்தூர்-641018